19663

OFFICE COPY

திருக்கோணமலை
மாதர்ஐக்கியசங்கம்.



# மாதர்மதிமாலிகை.

திருக்கோணமலை
மாதர் ஐக்கியசங்க ஆண்டு வெளியீடு.

மலர் க. } அக்ஷயவருஷ தைமீ. { 1927.

கலாநிதியந்திரசாலை—பருத்தித்துறை.

KALANIDI PRESS, POINT PEDRO.

திருக்கோணமலை

# மாதர்ஐக்கியசங்கம்.

(ஸ்தாபனம்-காலயுக்தி ஜூலை, 1919)

தலைவி,

ஸ்ரீமதி. அ. விசாலாக்ஷிப்பிள்ளை.

உபதலைவி,

ஸ்ரீமதி. சு. தங்கம்மாள்.

காரியதரிசி,

ஸ்ரீமதி. சு. தையல்நாயகி.

தனாதிகாரி,

ஸ்ரீமதி. சு. தங்கம்மாள்.

நிருவாகசபையார்,

1. ஸ்ரீமதி. சி. இரத்தினசவுந்தரம்மாள்
2. ,, பா. கமலாம்பிகை
3. ,, கு. தெய்வநாயகி
4. ,, சு. நாகம்மாள்
5. ,, நா. நீலாயதாக்ஷி
6. ,, அ. பாக்கியம்
7. ,, வே. பரமபாக்கியம்
8. ,, வ. புவனேஸ்வரி
9. ,, தா. பொன்னம்மாள்
10. ,, க. யோகாம்பிகை
11. ,, இ வள்ளிநாயகம்
12. ,, க. வள்ளியம்மாள்.

உ

சிவமயம்.

# மாதர்மதிமாலிகை

## அக்ஷயஹூ தைமீ.

உள்ளுறை. பக்கம்.


க. கடவுள்வாழ்த்து ... ... ... ... ந.

உ. திருக்கோணமலை மாதர்ஐக்கியசங்க வாழ்த்துப்பா-பண்டிதை ஸ்ரீமதி. ந. பத்மாசனி அம்மாள் ... ச.

ந. ஐந்தாம்ஆண்டுநிறைவுவிழா— திரு. தி. க. இராஜேஸ்வரன் B. A. ... ... ... ... ரு.

ச. "மாதர்மதிமாலிகை" ... ... ... ... எ.

ரு. திருக்கோணமலை ஸ்ரீ. சண்முகவித்தியாலயம்— ஸ்ரீமதி. தையல்நாயகி சுப்பிரமணியம் ... சு.

சு. பெண்பாலார்—இயற்கைமகவு ... ... ... கக.

எ. அன்னையெனும் அருந்தெய்வம்— ஸ்ரீமாந். கே. சி. இராமஸ்வாமி M. A., L. T. ... ... ... கரு.

அ. திருக்கோணமலை மாதர்ஐக்கியசங்கவாழ்த்துரை— பண்டிதை ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார் கஅ.

சு. பெண்கள்சங்கம் எங்கும்பெருகுக— ஸ்ரீமதி. க. வள்ளியம்மாள் ... ... ... ... உ0.

க0. தேசபக்தி— ஸ்ரீமத். விபுலானந்தசுவாமிகள் ... உந.

கக. அன்னையர் மாண்பும் அவர்பெருங்கடமையும்— ஸ்ரீமதி. மா. மங்களம்மாள் ... ... ... உச.

கஉ. இந்தியப்பெண்களின் தற்காலநிலையும் அவர்தம் வேலையும்—தேவாரம் R. நாராயணஸ்வாமி ... உஎ.

கந. தேவாஸுரயுத்தம்—சகோதரி R. S. சுப்பலக்ஷ்மியம்மாள் B. A., L. T. ... ... ... நஉ.

கச. உலகத்தின் உற்பத்தி— திரு. தி. க. இராஜராஜன் B. A ... ... ... ... நச.

கரு. விருத்தம்—திரு. மா. பீதாம்பரம்பிள்ளை ... ச0.

கசு. திருக்கோணமலைமாதர்ஐக்கியசங்க ஆண்டுநிறைவு விழாவாழ்த்துப்பாக்கள்—திரு. தி. க. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் B. A. ... ... சரு.

கஎ. ஐந்தாம் ஆண்டு அறிக்கைப்பத்திரம் ... ... சசு.



ஓம்.

# மாதர்மதிமாலிகை.


திருக்கோணமலை

மாதர் ஐக்கியசங்க ஆண்டுவெளியீடு.

மலர் க. } அக்ஷயவருஷம் தைமாசம். { 1927.


## கடவுள்வாழ்த்து.

### விநாயகக்கடவுள்.

சீர்வளர் மேரு தன்னிற் சிகரமா கியதென் கோணைப்
பேர்வளர் தலத்தின் மேய பிஞ்ஞக னருளால் வந்த
பார்வளர் உயிரைக் காக்கும் பருஉமதத் தடக்கை முக்கட்
கார்வளர் இபமு கத்துக் கடவுளைக் கருத்துள் வைப்பாம்.

-திருக்கோணாசலபுராணம்.

### கோணேசர்.

வாருலவு முகிண்முலையு முத்தரிய மணிமார்பு மலர்க்க ணோக்குங்
காருலவு சுரிகுழலு மொருபாகந் திருமேனி கவின்று தோன்றச்
சீருலவு மதியரவு மதிமுடிமே லொருபாகஞ் சிறக்கத் தோற்று
நீருலவு கயிலைமலைப் பெருமானை மறவாதென் னினைவு நெஞ்சும்.

-தக்ஷிணகைலாசபுராணம்.

சுகமயம்.

## திருக்கோணமலை

# மாதர்ஐக்கியசங்கவாழ்த்து.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இந்திர வளங்கண் மிக்க விலண்டன்மா நகரோ சீர்சா
லிந்தியர் போற்றுங் கல்கற் ரூவெனு நகரோ வென்ன
விந்தமா நிலத்தி லுள்ளார் யாவரு மியம்பற் கேற்ற
சுந்தரந் திகழக் கோண மலைநகர் துலங்கு மன்றே. (க)

தக்கிண கைலை யென்னுந் தகைபெறு நாமஞ் சான்ற
மிக்கசீர் நகரி னூடே மெய்யறம் வளர்ப்பான் வேண்டி
மைக்கருங் குழலார் ரோஜா மலர்நிகர் முகத்து மாத
ரைக்கிய சங்க மொன்றை யணிபெற நாட்டி னாரே. (உ)

மதியிரு முறைய தாக மருவியே யிவர்க ளீண்டி
மதிநிகர் மதியே பெற்று மங்கையர் யாரும் வாழத்
துதிபெறு முபந்நி யாச மழைசொரி தொழிலை யன்பா
ணதிமுடி யணிந்த கோணை நாதனார் காக்க மாதோ. (ங)

திருக்கோண மலையின் மாதர் செய்தவம் பலித்த தென்ன
வரிக்கோல விழிசேர் தங்கம் மாளெனு மயிலை யன்னாள்
தருக்கோடு மாக்கும் வித்தி யாலயந் தழைத்து வாழ்க
மருக்கோடுங் குழலா ளிந்த மங்கைதன் சீரும் வாழ்க. (ச)

மாதரார் சங்கம் வாழ்க மாதர்மதி மாலிகை வாழ்க
மாதரார் கற்பு வாழ்க மாதர்நல் லறங்கள் வாழ்க
மாதரார் கல்வி வாழ்க மாதரார் குணங்கள் வாழ்க
மாதர்சீ ரினிது வாழ்க மகிதலஞ் சிறக்க மாதோ. (ரு)

ந. பத்மாசனி.

திருக்கோணமலை

மாதர் ஐக்கிய சங்கம்.

# ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா.

## திரு. தி. க. இராஜேசுவரன் அவர்கள் B. A.

எழுதியது.

மலர்தலை யுலகின் மல்கிய புகழ்பெறு
ஈழநன் னாட்டி னுளினி துற விளங்கும்
நீர்வள நிலவள நீடுற வமைந்து
மருதஞ் சான்ற திருவமர் சிறப்பிற்
கோணு தோங்கிய கோணமா மலையிற்
குழலிசைக் குதலைக் கொவ்வை வாய்ச்சியர்
கேடில்விழுச் செல்வம் கல்வியென் றோர்ந்து
பங்கய வாண்முக மங்கையர் தங்கட்
கிலறு மிலக்கண விலக்கிய நூல்களிற்
பயிற்சியும் ஒழுக்கமும் பயத்தற் பொருட்டுக்
காதல் கூர்ந்து கருத்துறு மன்பொடு
மாண்புற நாட்டிய மாதரார் சங்க
முலகினி னிலவுத லுணரா ருளரோ!
சால்புறு மகளிர் சாருமிவ் வாண்டினில்
வெண்மதி கரிதென வெண்மை சான்ற
சங்கவெண் சுதையுடைச் சண்முகாலயந் தனிற்
றிங்கட் கிருமுறை திரண்டு குழுமினர்

கற்றோர் நயப்புற மற்றோர் வியப்புற
மன்னவை யோர்கள் மகிழ்ச்சி நனிபூப்பப்
பிரசங்க மாரி பெரிதும் பொழியச்
சங்கை யகற்றியே தங்களுணர்வினைத்
தகுமுறை நாடித் தெளிந்துரை யாடித்
தருக்க முறையிற் சால்புற்று விளங்கினர்
பொய்யுணர் வகன்று மெய்யுணர் வெய்தினர்
கோதிலாக் குசை நுதிக் கூர்மைகொண் மதியுடன்
சொல்வளச் சுவையாற் சோர்வின்றி நிரம்பினர்
செல்வத்துட் செல்வமாஞ் செவிச்செல்வ மதனைத்
தெண்முத்தங் குயின்ற திருமாளிகைக்கண்
நாடினர் பெறீஇ நற்புகழ் படைத்தனர்
அதனால்,
அரும்பெறன் மாதரார் ஐக்கிய சங்கமும்
துங்கமா ரிந்தச் சங்கத் திலங்கு
மங்கத் தவர்களு மன்புடன் பொருளாற்
பண்புற விதனைப் பாலிப் போரும்
மேதினி யெங்கணும் வியன்புகழ் படைத்துத்
தாழா தோங்கித் தழைத்து
வாழி வாழியிம் மாநில மிசையே.

# மாதர் மதிமாலிகை

## திருக்கோணமலை மாதர் ஐக்கியசங்கம்.

அலகிலாக் கருணை யென்னு
மந்தளி ரீன்று தொல்லை
உலகெலாம் பூத்துக் கங்கை
யுவட்டெடுத் தொழுகுஞ் சென்னி
மலையினிற் படர்ந்த பச்சை
மாகதக் கொடியை ஞானக்
கலையமு தொழுகு தீஞ்சொற்
கனியினைக் கருத்துள் வைப்பாம்.

-அதிவீராமபாண்டியன்.

திருக்கோணமலை, குமரநாயகனது திருவவதாரமாய்ச் சீர்காழியிற் றோன்றிய திருஞான சம்பந்தமூர்த்திநாயனாரின் தேவாரம்பெற்ற தலங்களுள் ஒன்று. இஃது ஈழநாட்டின் கீழ்பால் உள்ளது; இயற்கைவனப்புப் பெரிதும் வாய்ந்தது. இயற்கையா யமைந்துள்ள சிறந்த துறைமுகத்தையுடையது; கலங்கரை விளக்கம் ஒன்று இலங்கப்பெறுவது. கண்டோர் களிபேருவகை எய்துங்காட்சிதரும் இத்தென்கயிலையில், மாதுமை அம்மையார் வாமபாகத்துவிளங்க வீற்றிருந்து அருள்பாலிப்பவர், உலகம் அனைத்தினுக்கும் ஓர்உயர்தனிக் கலங்கரைவிளக்கமாய்விளங்கும் கோணேசர் ஆவர். கோணநாயகர் திருவருளைப்பெறுமாறு வரும் அடியார்பலர். அன்றியும், உலகத்துள்ள சிறந்த துறைமுகங் களுள் ஒன்றாய்விளங்கும் இத்துறைமுகத்துக்குப் போர்க்கலங் களில்வந்து செல்லும் ஆங்கிலர்பலராவர்.

பல்வகை வளங்களும் பொருந்திய இத்"தக்ஷிணகைலாசம்" ஒருசைவத் தமிழ்நாடு. ஈண்டுள்ளமகளிரின் முன்னேற்றத் தைக் கருதிச் சென்றகாலயுத்தியாண்டு பங்குனித்திங்களில் "திருக்கோணமலை மாதர்ஐக்கியசங்கம்" எனப்பெயரிய இச்சங்கம் நிறுவப்படலாயிற்று. கோணநாயகர் திருவருளாலும், சங்க அங்கத்தவரின் ஆர்வமிக்க ஊக்கத்தாலும், சங்கமானது மூன்று வருடக்காலம் தளர்வின்றி நடத்தப்படலாயிற்று. பின்பு, இரண்டு

வருடக்காலம் சிறிதுமங்கியிருந்து, சென்ற இரத்தாக்ஷி வருஷம் மார்கழிமாசத்தில் மீண்டும் ஆரம்பமாயது. அற்றைநாள் தொடங்கி இற்றைநாள்வரையும் கூட்டங்கள் செவ்வனே நடத்தப் பெற்று வருகின்றன. நான்காமாண்டு நிறைவுவிழா, சென்ற குரோதன வருடம் மார்கழிமாசம் ௨௫ம்தேதி (9-1-26) ஸ்ரீமத். விபுலானந்தசுவாமிகளின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடத்தப்பெற்றது

இவ்வாண்டு திங்கட்கிருமுறை சனிக்கிழமைகள்தோறும் கூட்டங்கள் நன்கு நடத்தப்பெற்றுவந்தன; அன்றியும், திருக்கோணமலைக்கு விஜயஞ்செய்த பெரியார்பலரால் விசேஷபிரசங்கங்களும் செய்யப்பட்டன. முன்னையவாண்டு நிகழ்ச்சிகளிலும் இவ்வாண்டு நிகழ்ச்சிகள் எமக்குப் பெருமகிழ்வையும் ஊக்கத்தையும் தருகின்றன. அங்கத்தவராயுள்ளார் கூட்டத்துக்கு ஒழுங்காகவருவதோடு சங்கவளர்ச்சியிலும் ஈடுபட்டுமுயற்சித்து வருகின்றனர்.

சங்கஅங்கத்தினரும் சங்கவளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்துவரும் சகோதரசகோதரிகளும், எங்கள்சங்கவளர்ச்சியினையறிந்து அகமகிழ்வதுடன், கல்வியறிவாளர்எழுதும்கட்டுரைகளையும் கண்டுகளிக்கவேண்டும் என்னும்ஆவல்கொண்டு திருவருளை முன்னிட்டு "மாதர்மதிமாலிகை" என்னும் இப்பத்திரிகையினை வெளியிடுகின்றோம். இச்சிறுமகவைக் கைத்தலத்தேந்தி, மழலைமொழிகேட்டு மகிழுமாறு சகோதரசகோதரிகளை அன்புடன் வேண்டுகின்றோம்.

பத்திரிகைக்குக்கட்டுரைகள் தந்துதவிய பெரியார்க்கும், அச்சிடுங்காற் பிரதிகளை ஒப்புநோக்கி உதவிபுரிந்த பண்டிதை ஸ்ரீமதி. க. பத்மாசனி அம்மாள் அவர்கட்கும், சங்கவளர்ச்சிக்காகமுயற்சித்துவரும் சகோதர சகோதரிகட்கும் நன்றி கூறுகின்றோம். இச்சங்கமானது மேன்மேலும் ஓங்கிவளரத் திருவருள் பாலிக்குமாறு தென்கயிலைப்பெருமானை வழுத்துவோமாக!

"காண்மின்கள்! தென்கைலைப் பெருமான்றன் திருமேனி கருதுமின்கள்!
பேண்மின்கள்! சந்நிதியிற் புகுமின்கள்! தொழுமின்கள்! பேசுமின்கள்!
கேண்மின்கள்! கைலாச புராணமெனுஞ் சிவகதையைக் கிளைகளோடும்!
வாண்மின்கள்! உய்மின்கள்!! அஞ்செழுத்தை மறவாது வாழ்த்துமின்கள்!!!

-ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம்

தையல்நாயகி சுப்பிரமணியம்.

காரியதரிசி.

திருக்கோணமலை மாதர் ஐக்கியசங்கம்.

திருக்கோணமலை

# ஸ்ரீ சண்முக வித்தியாலயம்.

"கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம்பந்தன் உற்ற செந்தமிழார் மாலை" பெற்றதலங்களுள் ஒன்றாய்விளங்குவது திருக்கோணமாமலை. தேவாரம்பெற்ற இத்தலத்தில், எங்கள் செல்வமாநகரில், ஸ்ரீசண்முகவித்தியாலயம் எனப்பெயரிய ஒரு சைவ ஆங்கிலபாலிகாப்பாடசாலை நிறுவப்பெற்று நன்குநடைபெற்றுவருகின்றது. சிறப்புவாய்ந்த இததருமத்தைச்செய்தவர் மாது ஸ்ரீ. ச. தங்கம்மாள் என்னும் மாதரசியாராவார். ஈழமண்டலத்தின் ஒருபாகமாகிய இவ்விலங்காதீபத்தில் இத்தகைய உயரிய தருமத்தைச்செய்ய முன்வந்த பெண்பாலாருள் இவரே முதன்மைபெற்றவராவர்.

இம்மாதரசியார் திருக்கோணமலையில் ஒரு தகைமைசால் குடும்பத்திற்பிறந்து, கல்விபயின்று, ஸ்ரீமான். சி. சண்முகம்பிள்ளையென்னும் பெரியாரைமணந்து பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாய் இல்லறதருமத்தை இனிதுநடாத்தி வந்தனர். இவ்வம்மணியின் பர்த்தாவோவெனில், "திரைகடல்ஓடியுந் திரவியந் தேடு" என்னும் முதுமொழிக்கிணங்க, பலமுயற்சிகளினலும் பொருளீட்டி மிக்கதனவந்தராய் வதிந்துவந்தனர். அப்பெரியார் பல்வகைத்தருமங்கள்புரிந்து, தமது அந்தியகாலத்தில், பந்துக்களுக்கு ஈந்து எஞ்சியபொருளைத் தமது பாரியாரிடம்பொறுப்பித்துத் தாம் பாலிகாபாடசாலைஒன்றைத் தாபிக்க எண்ணியிருந்ததாகவும் கூறினர்.

இவ்வம்மையாரும் தமது நாயகரதுஎண்ணத்தை நிறைவேற்றவேண்டும் என்னும் பேராவலினல் சிலஆண்டுகட்குமுன் சைவத்தமிழ்ப் பாலிகாபாடசாலை ஒன்றை ஸ்தாபித்தனர்; பின்பு இவ்வாண்டில், பல்லாயிரம்ரூபாய் செலவிட்டு அமைத்த அழகிய மண்டபத்தில் ஒரு சைவ ஆங்கில பாலிகாபாடசாலையை நிறுவினர். இவர் சைவச்சிறுமியர்மீது கொண்டபேரன்பை யார்தான்

அளக்கவல்லார்! திருவனந்தபுரத்திருந்துவந்த ஸ்ரீமதி. பவானி அம்மா B. A. அவர்கள் தலைமை ஆசிரியையாகவிருந்து கலாசாலையை நன்குநடத்திவருகின்றார்கள். இன்னும், சிறுமியர்க்குவேண்டிய கல்வியினைப்புகட்டவல்ல ஆசிரியைகளை அழைத்தற்கு ஏற்ற ஒழுங்குகள்செய்து வருகின்றார்கள்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று".

என்பது திருவள்ளுவநாயனார் திருவாக்கு.

சகோதரசகோதரிகளே! இத்திருவாக்குக்கு இலக்கியமாக விளங்குகின்ற இவ்வம்மையாரை; பதிபக்திகொண்டு ஊக்கத்துடன்உழைத்து, தேசாசாரம் மதாசாரம் என்னும்இவ்வாசாரங்களில் வழுவாது சைவச்சிறுமியர், எங்கள் செல்வக்குழந்தைகள், தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிகளையும் கற்றற்குரிய பாடசாலைகள் இரண்டினை அமைத்துத்தந்த இவரை; தமிழ்த்தாயின் புதல்வியரான நாம் எந்நாளும் மறவாதுபோற்றுதல் எம் மேற்பொறுத்த பெருங்கடனாகும்.

அன்றியும், சென்ற இரண்டுஆண்டுகளாக திருக்கோணமலை மாதர்ஐக்கிய சங்கக்கூட்டங்களை நடத்துவதற்குத் தமது ஸ்ரீசண்முகவித்தியாலய மண்டபத்தைத் தந்து உதவிவருகின்ற இவ்வம்மையாருக்கு யானும் எங்கள் சங்கஅங்கத்தினரும் நன்றிசெலுத்துகின்றோம்.

திருக்கோணமலையிற் சைவக்கல்விசிறந்தோங்கி எங்கள் சைவச்சிறுமியரும் சிறுவரும் நற்பயன்பெறுமாறு கோணேசலேசர் திருவருள்பாலிப்பாராக.

தையல்நாயகி சுப்பிரமணியம்.

# பெண்பாலார்.

காலத்துக்கேற்ற கோலமாக நம்தேசப்பெண்மக்களிற் பெரும்பாலார் நவீனநாகரிகச்சேற்றிலமிழ்ந்தியவர்களாய் மிக்க சீர்கெட்டநிலையிலிருக்கின்றார்களென்பது வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதினுணரக்கிடக்கின்றது. இந்நிலைமைக்குக்காரணம் அந்நியர்தஞ்சேர்க்கையே. ஆன்மா சார்ந்ததன்வண்ணமாகமாறுவது இயற்கையாகுமன்றோ, அந்நியர்தஞ்சேர்க்கையால் மாதரார்பலருந் தத்தமக்குரிய ஒழுக்கவழக்கங்களைக் கைவிட்டனராய் அந்நியர்தம் ஒழுக்கவழக்கங்களைக் கைக்கொண்டுவருகின்றனர். இதனால் நம்தேசமானது சுதந்தரமிழந்து பரதேசிமயமாகக் கேவலமடைந்திருக்கின்றது. ஒருதேசத்தினுயர்வுந்தாழ்வும் அத்தேசத்துப் பெண்மக்களையே பொறுத்திருக்கின்றன. ஆதலால் பெண்மக்கள்திருந்துவதே தேசத்தின்உயர்ச்சிக்கடிப்படையாகும்.

பண்டைத்தமிழ்மக்கள் தம்ஒழுக்கவழக்கங்களெல்லாம் அந்நியநாட்டார்தங் கூட்டுறவால் முறைபிறழ்ந்துகிடத்தலால் நம்மவர்கள் தத்தமக்குரியநாகரிகமின்னதெனவுணர்ந்துகொள்ளமாட்டாது தத்தம் மனம்போனபோக்கின்படி பலபலதுறைகளிலும் ஒழுகிவருகின்றனர். பண்டைக்காலத்தில் நமதுநாடே பிறநாட்டார்க்கு நாகரிகத்தைவழங்கியுள்ளதென்பது சாஸ்திரஆராய்ச்சியாற் கண்டுதெளிந்த ஒருமுடிபாகும். ஆகவே நாம் நமது பூர்வீகஉன்னதநிலையையடைதற்காக முயற்சிக்கவேண்டியது கடமையாகும்.

இந்த மேன்மைமிக்ககடமையையியற்றவேண்டுமென்னும் நல்லெண்ணம்வாய்ந்த சகோதரிமார்சிலர் இம்முயற்சியிற்றலையிட்டனராய் "திருக்கோணமலை மாதர்ஐக்கியசங்க"மென ஓர்சங்கந்தாபித்துத் தங்கடமையையியன்றவரையிலூக்கத்துடனியற்றலாயினர். காலநிலைக்கேற்றவிதமாக நாகரிகமுறையைச் சீர்ப்படுத்துவதற்குச் சங்கச்சார்பு இன்றியமையாததொன்றாகலாற் சங்கவழிக்கொடு தேசத்தைத்திருத்துவதற்குமுற்பட்டமையின்னோர்தம் நுண்ணறிவை ஒருவாறு விளக்குகின்றது. இவர்தம் நன்முயற்சியினிது.நிறைவேறும்வண்ணம் அருளாகியமழையைச்சொரிந்து எம்பெருமானிரட்சிப்பாராக.

இச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியாராகிய சௌபாக்கியவதி தையல்நாயகியம்மையார்அவர்கள் தாம்கொண்டபேரன்புகாரணமாகப் புன்மதியிற் புன்மதியுடையேனாகிய யானும் இச்சங்கத்தார்தம் கூட்டுறவைப்பெறவும் நேர்ந்தது. இச்சங்கத்தார் என்மீதுகொண்டஅன்புக்குநன்றியறிதலாக என்சிறுமதிக்கேற்ற இச்சிற்றுரையையும் வரையமுற்பட்டேன். நவையுளவேல் அறிஞர் பொறைபுரிக.

பெண்பாலாரைச் சீர்ப்படுத்துவதற்கேற்றசாதனங்கல்வியொன்றே. பெண்களுக்கூட்டப்படுங்கல்வியானது காலநிலைக்கேற்றவிதமாக ஒழுங்கானமுறையிலமைக்கப்படல்வேண்டும். இக்காலத்திற் பெரும்பாலும் மேனுட்டவர்தம் நாகரிகமுறைபற்றியே கல்விகற்கப்படுகின்றது. இக்கல்வியினுலேயே ஒழுக்கவழக்கங்களெல்லாம் மேனுட்டுமுறையாகமாறிவருகின்றன. வெள்ளையர்போன்று முழந்தாள்வரையிலுடையையணிந்துகோடல், நாடகம்நடித்தல், காவாலிப்பெண்களாய்ப் பலபடத்திரிதல் இத்தியாதியிழிதொழில்களையெல்லாம் நாணமின்றிச்செய்கின்றனர். இச்செயல்களெல்லாம் நமதுநாகரிகத்துக்கு முற்றிலும் மாறுபாடானவைகளே. பூர்வகாலத்தில் தமிழ்நாட்டுப்பெண்மக்கள் கல்வியிற்பெரியராயிருந்தனர். அவையேறிப் பரிசும்பெற்றனர். ஆடவர்களுடன் சமஉரிமைபெற்றிருந்தனர். ஆனுல் தமது பெண்மைக்குணத்துக்கேற்புடைத்தான ஒழுக்கவழக்கங்களையுடையராகவே வாழ்ந்துவந்தனர். இங்ஙனமிருந்தமையினுலேயே இவர்கள் "கற்புக்கடம்பூண்ட வித்தெய்வமல்லது பொற்புடைத்தெய்வம்யாங் கண்டிலமால்" எனப் பெரியாருரைக்குஞ் சிறப்புரைக்கு இலக்கியமாயிருந்தார்கள்.

"பெண்ணிற்பெருந்தக்கயாவுளகற்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்" என்னுந்

தெய்வத்திருநாவலர் மெய்யுரையின்படி பெண்களுக்குச்சகலமேன்மையையுங்கொடுப்பது கற்பென்னுஞ் சிறந்தபூஷணமே. ஆங்கதனை நனிபோற்றவேண்டியது நமக்குரிய முதற்கடமையாகும். நாம் என்றைக்குக் கற்பென்னுஞ் சீரியஅணியையிழந்தோமோ அன்றைக்கே உயிர்உடம்புமுதலியயாவற்றையுமிழந்தவர்களாவோம். அநுமாரானவர் இலங்காபுரியிற் சீதாதேவியைத்தேடிச்சென்ற அந்நாளில் இராவணனதுபத்தினியாகிய வண்டோதரியைக்கண்டு ஜானகியம்மையாராமெனவயிர்த்துக்கூறியுள்ள

"எற்புவான்றொடர்யாக்கையிற்பெறும்பயனிழந்தனனிதுநிற்க
அற்புவான்றழையிற்பிறப்பதனெடுமிழந்துதன்னருந்தெய்வக்
கற்புநீங்கியகனங்குழையிவளெனிற்காகுத்தன்புகழோடும்
பொற்பும்யானுமிவ்விலங்கையுமரக்கரும்பொன்றுதுமின்றென்றுன்."

என்னுங்கவியை வாசிப்போர்க்கு அக்காலத்திய பெண்களும் ஆடவர்களும் கற்பினையெவ்வாறு போற்றிவந்தார்களென்பது நன்குவிளங்கும். ஆகவே நாமும் இத்தகைய கற்பினைப்போற்றிவருதற்குரிய வழியையாராய்ந்து அதன்முறை நடத்தல்வேண்டும்.

மேனுட்டுநாகரிகமானது நமக்குச் சிறப்புடையதாக மதிக்கப்படுகின்ற கற்பெனப்படுந்திவ்வியபூஷணத்தையெள்ளளவேனும் காக்கத்தகுந்தநிலையினதல்ல. ஆடவர்களும் பெண்களும் மிருகங்கள்போல வித்தியாசமின்றியுலவுதலும், கூத்தாடல் (Dancing) முதலான அநாகரிகமான தொழிலைச்

செய்தலுமாகிய இவைபோன்ற பிற பலகெட்டவழக்கங்களையுடையதாயிருக்கின்றது. அன்றியும் மேனாட்டார்தம்வாழ்க்கை உடம்புவரையிலுள்ளது. "என்னுடையகுழந்தையும் உன்னுடையகுழந்தையும் எங்களுடைய குழந்தைகளுடன் விளையாடுகின்றன. என்றுகூறத்தகுந்ததானநிலையினதேயிவர்களுடைய வாழ்க்கை." இவ்வசனத்தையாராய்ந்துபார்த்தால்இவர்களுடையவாழ்க்கையின் இழிதகவு பொள்ளெனப்புலனாகும்.

எமதுசமூகத்தில் இவ்விதமான ஒழுக்கவழக்கங்களைக்காண்டலருமையினுமருமையாகும். எம்மனோர்வாழ்க்கை உயிரைப்பொறுத்துள்ளது. மேனாட்டிலே ஓர்குடும்பத்துளநாயகன் வடக்கேயோடுவான், நாயகி தெற்கேயோடுவாள், பிள்ளைகள் கிழக்கேயோடுவார்கள். ஆனால் கீழ்நாட்டிலிவ்விதமான அநாகரிகச்செயல்களில்லை. ஒருநாயகனும் நாயகியும் மாறுபாடின்றி ஒருகருமத்தைச்செய்வார்கள். ஒருநாயகன்செய்யும் பாவச்செயல்கள் அவனுடைய நாயகியை அடையமாட்டா, ஆனால் அவன்செய்யும் புண்ணியத்தில் அரைப்பாகம் நாயகியைச்சேரும். இவ்விதமாக ஆண்மைக்குணத்துக்கும் பெண்மைக்குணத்துக்கும் ஏற்றபடி உயரியநாகரிகம்வாய்ந்த வாழ்க்கையையுடையராயிருக்கின்றார்கள், இன்னும் கீழ்நாட்டார் தம்வாழ்க்கையைப்பொறுத்த ஒவ்வொருசெயலும் ஆன்மலாபத்திற்கின்றியமையாத செய்கையேயாகும், மேனாட்டவர்தம் வாழ்க்கை முற்றிலும் லோகாயத வாழ்க்கையே. எம்மனோர்வாழ்க்கையோ இம்மைக்கும் மறுமைக்கும் நற்பயனையளிக்கவல்லதாகும்.

ஆகவே உயரிய இலச்சியத்தையுடைய கீழ்நாட்டுநாகரிகவாழ்க்கையை மேனாட்டு அநாகரிகவாழ்க்கையாகமாற்றிக்கொள்ளவிரும்புதல் பேதைமைப்பாலதாகும், இக்காலத்தில் நமதுநாட்டின் பற்பலபாகங்களிலும் மேனாட்டு நாகரிகமே பரவிவருகின்றது. இதற்கு மேனாட்டார்தங் கலாசாலைகளிலும் மேனாட்டுமுறைப்படிகற்பிக்கப்படுங் கலாசாலைகளிலும் நம்நாட்டுச்சிறுமிகள் கல்விகற்கப்புகுவதே முதற்காரணமாகும். இக்கல்வியைக் கற்றுக்கொண்டதும் தம்வாழ்க்கையையும் மேனாட்டுமுறைப்படிமாற்றிக்கொள்ளத் தலைப்படுகின்றனர். இதனால் நமதுதேசம் கீழ்நிலையடையுமென்பதிற்சந்தேகமில்லை.

நம்நாட்டுச்சிறுமியர்க்குத் தாய்மொழிப்பயிற்சியே முதலாவதாகக் கொடுக்கப்படுதல்வேண்டும். பிறமொழிப்பயிற்சியூட்டப்படுங்காலும் தாய்மொழிப்பயிற்சி கட்டாய பாடமாகவிருந்துவருதல்வேண்டும். இன்னும்இக்கல்விப்பயிற்சி புத்தகக்கல்வியளவில் நின்றுவிடாமல் காலதேசநிலைக்கேற்றவிதமாக வாழ்க்கையையொழுங்குபடுத்திக்கொள்ளத்தக்க நிலையினதாகவுமிருத்தல்வேண்டும். பழையனவென்று முன்னோர்வழக்கங்களை முற்றாகக் கைக்கொள்ளுதலுமியலாது. புதியனவென்று இக்காலவழக்கங்களை முற்றாகக்கைவிடுதலும்இயலாது. நீர்பிரித்துப் பாலுண்ணும் நீர்மையினையுடை

ய அன்னமென்னக் கொள்ளத்தருவனவற்றைக்கொண்டும் தள்ளத்தகுவன வற்றைத்தள்ளியும் வாழ்தலே நமதுகடமையாகும்.

இன்னும் இந்நவீனநாகரிகவழியொழுகும் பெண்மக்கள்பால் கடவுள்வழிபாடும் அத்திமலர்போலபூர்வமாக இருக்கின்றது. நமதுதேகமோ நீர்க்குமிழிபோல் நிலையற்றது. புல்லும் புழுவும் பறவையும் விலங்குமாகிய பல்வகைப்பிறவிதோறும் பிறந்திறந்துழன்று ஈற்றிலெடுத்ததுவேயிந்தமானிடசென்மம். கிடைத்தற்கரியவிம்மானிடப்பிறவியையெடுத்தபோதே நாம் நமது ஆன்மலாபத்துக்கின்றியமையாதனவாகிய செயல்களைச்செய்து கோடல்வேண்டும். நமது உடையலங்காரமும் ஆபரணலங்காரமும் லவாந்தர், அத்தர், பனிநீர் முதலான பூச்சலங்காரமும் பிறபலஅலங்காரமும் நமக்கு உண்மையாக அழகைக்கொடுப்பனவல்ல, இவைகளெல்லாம் போலியலங்காரங்களே. இவற்றினுலுளதாம்பயனுமில்லை. ஆனுலும் நமதுகர்மாநுகுணமாக இவைகளை நாம்மெய்யெனக்கொண்டு இவற்றின்மீது அளவிறந்த இச்சையுடையோமாகி வாழ்ந்துவருகின்றோம். இம்மாயவாழ்க்கையைவிடுத்து உண்மையானபேரின்பத்தையடைதற்கு நாம்முயற்சித்தல்வேண்டும்.

நமது அஞ்ஞானத்தைப்போக்கி மெய்ஞ்ஞானத்தையூட்டவல்லது கடவுளுடைய அருளொன்றேயாம். அவ்வருளைப்பெற்றுக்கோடற்கு நாம் கடவுளைவழிபடுதல்வேண்டும். ஆலயத்துக்குப்போதல், விரதமனுஷ்டித்தல், பிறவுயிரிலன்புவைத்தல் முதலானயாவும் கடவுள்வழிபாடே. எவ்வுயிர்க்கு எந்தநன்மையைச்செய்தாலும் அவைகளெல்லாம் ஆண்டவனுக்கியற்றியசெயல்களே. உலகம் கடவுள்மயம், ஆகவே உலகத்திற்குச்செய்யுஞ்செயல்களுங் கடவுளுக்குச்செய்யுஞ்செயல்களே. எவ்வுயிரிடத்தும் நீங்காமல் நிற்கின்றது சிவம். ஆதலால் நாம் எவ்வுயிர்க்கும் நன்மையைச்செய்தல்வேண்டும். ஆடு கோழி முதலான உயிர்ப்பிராணிகளைவதைத்து அவற்றினூனைப்புசித்தலும் இன்னபிற கொடுஞ்செயல்களும் மிகுந்தபாபமாகும். இவ்விதமான பாபச்செயல்களைவிடுத்து வாழ்தலோடு ஆலயங்களுக்குப்போய்க் கடவுளைவணங்குதலும் நமக்கு இன்றியமையாத ஓர் கருமமாகும். ஆலயங்களிலே கடவுளுடைய அருளுருவங்கள் உயிர்களுடையமனதைக் கவரத்தகுந்த தன்மையையுடையனவாகிய மந்திரநியாசத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் ஆலயங்களிற்சென்று வணங்குபவர்களுடைய மனமானது மந்திரசக்தியினுற்கவரப்பெற்றுச் சற்றேயுருகாநிற்கும். இவ்வேளையில் ஆண்டவனுடைய அருள் நம்மனதிற்பதியும். இவ்விதமாக அருள்பதியவே நமது அஞ்ஞானம் மெல்லமெல்லநீங்கிப்போக மெஞ்ஞானம் விருத்தியாகிவரும். இம்மெஞ்ஞானம் விருத்தியாகப்பெறுதலே நமது மனிதப்பிறவியின் பெறுபேருகும்.

ஆதலால் நாம் ஆலயவழிபாட்டை மிக்கபத்திசிரத்தையுடன் செய்யவேண்டியது நமதுகடமையாகும். நாடகம்முதலிய வேடிக்கைபார்க்கப்

போவதற்கும், ஒருவரையொருவர் சந்திக்கப்போவதற்கும் இன்னபிறவற்றிற்கும் எவ்வளவு சிரத்தையெடுக்கின்றார்களோ, அதுபோலவே ஆலயவழிபாட்டையும் மிக்கசிரத்தையுடன்செய்யவேண்டியது நம்மவர்களுக்கு இன்றியமையாத கடமையாகும். பெண்மக்கள் நன்மையைநாடியுழைத்துவருந் திருக்கோணமலை மாதர்ஐக்கியசங்கத்தார் இவ்விஷயத்திற் பெரிதுஞ்சிரத்தையெடுத்தல்வேண்டுமென்பது எனதுதாழ்மையானவேண்டுகோள்.

போலிப்புதுநாகரிகமென்னும் படுகுழியில்வீழ்ந்து லோகாயதர்களாய் வீண்வாழ்க்கைவாழாமல் பழந்தமிழ்நாட்டுமகளிரேபோல் உயரியவாழ்க்கையையுடையோராய் எம்சகோதரிகள்விளங்கும்வண்ணம் எம்பெருமான் இன்னருள்செய்க. சுபம்.

இயற்கைமகவு.

---

# அன்னையெனும் அருந்தெய்வம்.

கீழ்நகர் ஸ்ரீமாந். இராமஸ்வாமி எம். ஏ., எல். டி.,
"ஸ்ரீராமகிர்ஷ்ணவிஜயம்" பத்திராசிரியர்எழுதியது.

இப்பூவுலகத்துத்தோன்றிப் புகழ்பெற்ற மக்களெல்லோரும் தம்முயர்நிலைக்குக்காரணம் தம்மைப் பெற்றெடுத்துவளர்த்த தாய்மாரேயெனக்கூறியிருக்கின்றனர். இஃது ஒரு பெரும்உண்மை. ஆதலின், இப்பெருந்நிலைக்குப் பாத்திரமாகப் பெண்மக்கள் இருத்தல் கடமையாம். அக்கடமையை எவ்வாறு அவர்கள் செய்தல்கூடும் என்பதை ஆராய்வாம்.

நமது புராதனசாஸ்திரங்களிற் கூறியிருக்கின்றபடி, ஒருபெண் கருத்தரிக்குங்காலமுதல் பிரசவிக்கும்வரை எந்த எண்ணத்தை உள்ளத்திற் கொண்டிருக்கின்றனளோ அதன்படியே குழந்தையும் இருக்கும். இதனை மேனாட்டுச் சாஸ்திரவிற்பன்னர்களும் அங்கீகரிக்கின்றனர். அதனால் பெண்மக்கள், தங்கள் மனத்தை உயர்விஷயங்களிலே செலுத்தித் தூயஎண்ணங்களைக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகின்றது. ஏனெனில், அவருடைய எண்ணங்கள் அவர்கள்மட்டில் நில்லாதனவாய் அவருடைய மக்களையும் கட்டுப்படுத்துகின்றன. தாயைப்போலப்பிள்ளை என்னும் பழமொழி ஆழ்ந்தபொருள் உள்ளதாயிருக்கின்றது.

மனைவி கணவன் இவ்விருவருடைய அன்பின்பெருக்காற்றோன்றிய சிறுமகவு உலகிலுதித்ததுமுதல் தன்னன்னைமுகத்தையே முதலிற்காண்கின்றது எனலாம். அவ்வன்னை தன்மகனுக்கு ஊட்டும்முலைப்பால் கேவலம் தூலதேகத்தை மாத்திரம் வளர்ப்பதாகாது. சூக்குமதேகத்தையும்வளர்ப்பதாகும். அக்காலம்முதற்கொண்டு குழந்தை தக்க அறிவு அடையும்வரையில் தன் தாயின் அருகேநின்று, அவளுடைய நடை, பேச்சுமுதலியவற்றைக்கண்டு அதன்படியே நிற்கின்றது. தந்தையோ, உணவைத்தேடுவதற்கவசியமான பொருளினிமித்தம், வீட்டைவிட்டேகி வேலைசெய்து, உண்ணவும் உறங்கவுமே வீட்டிற்குவருகின்றார். ஆதலின் தந்தையைவிடத்தாயின் கடமையே மக்களைவளர்த்தலிற் பெரிதாயிருக்கின்றது. அன்னை, அன்பும்அடக்கமுங்கொண்டு, வந்தாரை உபசரித்து, செய்வனதிருந்தச்செய்து வருவாளேயாயின், அவளருகேயிருந்து, அவள்செய்யுங்கருமத்தையும், பேசுஞ்சொற்களையும், நடக்கும் மாதிரியையும் கவனிக்கும் குழந்தையும் அவ்வாறே செய்யும். இதனை நாம் நம்மில்லங்களிலும், நம்மயலாரில்லங்களிலும் நாள்தோறுங் காண்கின்றோம். இதனாற்றான், நம்மவர்ஒருபெண்ணை மணம்புரிய ஏற்பாடுகள்செய்யும்போது, அப்பெண்ணின் தாய் எத்தகையினள் என முதலில் அறிந்துகொள்ள முயல்கின்றார்கள். "தாயைப்பார்த்துப்பெண்ணைக்கொள்" என்பது அனுபவத்தில் உண்மையெனப் பலரறிந்த முதுமொழியாகும்.

மற்றும், குழந்தைகள், சிறுவயதுமுதற்கொண்டு, தமக்குவேண்டிய உதவியைப் பொருளைப் புத்திமதியைத் தாயிடமே கேட்டுப்பெறுகின்றன. ஏன்? அவளிடமே தமக்குவேண்டியவை கிடைக்குமென்ற நம்பிக்கை அக்குழந்தைகளுக்குண்டு. தன்தாய் அறியாத விஷயமில்லை, கொடுக்கமுடியாத பொருள் இல்லை என்பது அவர்கள் துணிபு. இப்பெரும் நம்பிக்கையைவளர்த்தல் தாய்மார்களின் பெருங்கடமையாம். இந்நம்பிக்கைகெடுமாயின், பிள்ளைகள் தங்கள்விருப்பத்தின்படியேநடந்து, பெற்றாருக்குப் பெருந்துயர் விளைப்பர். ஆதலினாலே, சிறுவயதிலே, குழந்தைகளின் குணம் படியுங்காலத்திலே தாய்மார்கள் மிகுந்தகவலையுடன் தம் மக்களினுடைய செயல்களைக் கவனித்துத் தகுந்தபடி செய்யக்காட்டி, அவர்களை நல்வழியிலே நடக்கும்படி தம்செயலாலும் பேச்சாலும் போதனையினாலும் செய்யவேண்டும். அப்படிச்செய்தால், பாலர்களும், பாலிகைகளும், தந்தாயிடம் குழந்தைப்பருவத்திற்கொண்ட அன்பும், நம்பிக்கையும் மாறாது. தமக்குற்றதுணை தம்மன்னையேயென்று அறிந்துநடப்பர். ஆதலினாலே, குழந்தைகள் தம்முடைய கஷ்டங்களையும், ஆவல்களையும் வேண்டுபவைகளையும் தம்மிடஞ் சொல்லவரும்போது, "எனக்கு நேரமில்லை," "தொந்தரவுசெய்யாதே," "உனக்கு அறிவில்லை" "அடிக்கடிவந்தால் அடிப்பேன்பார்" எனவும் கூறுதல் கூடாதாம். அப்படிச்செய்யும் ஸ்திரீகள் ''அன்னையெனும்அருந்தெய்வம்'' என்னும்பெரும்பேருக்கு உரியவர்களா

காமல், வெறுங் குட்டிகளாயினும் விலங்குகளுக்கு ஒப்பாவாரேயன்றி, அறிவுடையமக்களுடன் சேர்க்கப்படார்.

குழந்தைகள், பள்ளியிற்செல்லத்தொடங்கிய காலம்முதற்கொண்டு தாயினுடைய துணை குறைகின்றது எனலாம். ஆயினும் அறிவுடைய தாயாயிருப்பின் தம்மகனுடைய பள்ளிக் கல்வியிலும் கவலைகொண்டு, அவன் எவ்வாறு பயில்கின்றான், அவனுடைய தோழர்கள் யாவர் என்றறிந்துவருவாளாயின், தன் மகனுடைய அன்பை முன்னிலும் அதிகமாகப் பெறுகின்றாள். பிறகு மகனாயின் அவன் உத்தியோகஞ்செய்வதிலும், அவனுக்கு வாழ்க்கையின் இலக்ஷ்யத்தையெடுத்துரைப்பதிலும், அவனுக்கு மணம்முடித்து, தன் மனைவியுடன் அவன் இனிதே வாழவசதிகள்செய்து, அவர்கள் இன்புற்றிருப்பதைக்கண்டு களித்தும் இருக்கின்றாள். பெண்ணாயின், அவளைத் தக்கஇடத்திலே மணம்முடித்து, தன்பெண் இல்லறவாழ்க்கையை நன்கு நடத்துவதற்கானவைகளைச் செய்து, தன்மகளாலே தன்பெயரும் விளங்க மகிழ்கின்றாள். அப்போது அடையும் பேரானந்தத்திற்கு இணையுமுண்டோ? இதனையன்றோ, பொய்யில்புலவர்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்."

எனக்கூறியிருக்கின்றார். அத்தகைய நிலைமைக்குத் தன்மகனையோ மகளையோ கொண்டுவருந் தாய் அருந்தெய்வமேயன்றோ?

தெய்வத்தாய்மாரின் மொழிகேட்டுப் புகழுடல்பெற்ற சான்றோர் பெயரைக் கேட்கும்பொழுது உடல் சிலிர்க்கின்றது; மனம்பூரிக்கின்றது துருவனைப்பெற்றெடுத்த சுநீதி, இராமனைப்பெற்ற கௌசலை, லவகுஸலர்களின் அன்னையாம் ஸீதை, பாண்டவர்களின் மாதாவான குந்திமுதலியோரும், ஶிவாஜி ஸ்வாமி விவேகாநந்தர் மகாத்மாகாந்தி முதலியவர்களின் அன்னையோரும் நம்மிந்தியத்தாயர்களுக்குப் பெரும் வழிகாட்டிகளாகவிருக்கின்றனரன்றோ? அவ்வன்னைமாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி "அன்னையே அருந்தெய்வம்" என எல்லோரும் புகழுமாறு, நடந்துகொள்ளுதல் நந்தாய்மாரின்கடமையாமன்றோ.

---

திருக்கோணமலை மாதர்ஐக்கியசங்கத்தினர்க்கு

திருப்பாதிரிப்புலியூர் பண்டிதை

## ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்

எழுதிய

# வாழ்த்துரை.

திருக்கோமணலை மாதர் ஐக்கிய சங்க அங்கத்தினர்களாகிய எனதருமைச் சகோதரிகளே! புதல்விகளே!

எந்தச்சமூகமும் சுயமுயற்சியில்லாமல் உயர்நிலையடையமுடியாதென்பதுண்மை. பெண்மக்கள் நலங்கருதி ஆண்மக்கள் உழைத்தல்என்பது சிறிதளவு நலஞ்செய்யுமன்றி பெரும் செம்மைபயப்பதில்லை. நமது சகோதரர்களே நம்மைத்திருத்தியமைத்துக்கொள்ளல் கடனென இதுகாறும் நாம் வாளாவிருந்ததன்பயனே இதுபோழ்து வருந்தத்தக்கநிலையையளித்திருக்கிறது.

அவ்வாறு நாம்நினைப்பதாயின் நாம் சடப்பொருள்களேயாவோம்அன்றி மக்கள்இனத்தில் வைத்தெண்ணவும் தகுதியற்றவர்களாவோம். இதனால், ஆடவரின் ஒத்துணர்ச்சியன்றி அன்னாரைப்புறக்கணித்து சுயேச்சையாகநடக்கவேண்டுமென்பது என்கருத்தன்று. சிலநவீனநடைப்பற்றுடைய மாதர்கள்போல் ஆடவர்க்குப்போட்டியாகவோ சமமாகவோ அதிகாரம் ஆதிக்கம் இவற்றையடைய இந்தியப்பெண்மணிகள் முன்னணியில் அடியெடுத்துவைக்கவேண்டுமென்பதும் என்ஆவலன்று.

நமது ஆரியநாட்டுப்பழம்புகழ் வாய்ந்தகற்பரசிகளைப்பின்பற்றி ஒழுக்கம், வாய்மை, இன்சொல், விருந்தோம்பல், எளியவாழ்க்கை, நாட்டுடை, நாட்டுஉணவு, நாட்டுமொழி, நாட்டுக்கலை இவைகளில் ஆர்வம்பூத்து, தேசத்தையும் சமூகத்தையும் பொலிவுறச்செய்யவேண்டும் என்னும்எண்ணமே ஒவ்வொருசகோதரிகளின் உள்ளத்திலும்ஆழ்ந்துபதியவேண்டும்.

இத்தகையநல்லுணர்ச்சியில் எழுச்சியால்நீவிர்கூட்டிய சங்கத்தின்நிகழ்ச்சிகளை நேரிற்காணவும் கேட்கவும் பேறுவாய்த்திலேன்என்றாலும் என் முழுமனமும் நும்மத்தியில் அளவளாவிநிற்கின்றதென்பதை உரிமையுடன் தெரிவிக்கின்றேன்.

என்தாய்மார்களே!

அரைநூற்றாண்டாகவே பிறநாட்டுவழக்கங்களில் ஆர்வம்செலுத்தி எண்ணவும் எழுதவும் நினைக்கவும்முடியாத தாழ்ந்தநிலைமைக்கு வந்துவிட்டோம்என்பதை மறுக்கஇடமில்லை. ஆதலின் நாம் உயர்நிலையடையவேண்டுமெனின் மாதர்கள்கடைப்பிடித்து ஒழுகவேண்டியகுணங்கள்பலவுள. அ

வற்றுள் முதலாவது ஒழுக்கமாகும். இரண்டாவது சரீரவன்மைமையையளிக்கவல்ல குடும்பப்பணிகள்யாவையும் செய்யப்பயிற்சிபெறுதல், மூன்ருவது தாய்மொழிஎதுவோ அதில்தேர்ச்சியெய்துதல் அவ்வாறு கூறவதாக நாம்கருதவேண்டுமென்றி அவர்கள்நம்மைஅடிமைப்படுத்தித் தாம்மேன்மை பெறுவதாகஎண்ணுவதுபிழையாகும். விரிந்தஉலகஉணர்ச்சியும் பரந்தநயையும், சோம்பலற்றஉழைப்பும் பதட்டங்கடிந்தபொறையும் மன அமைதியும் நாமன்ரே கைக்கொண்டுமேன்மைபெறவேண்டும். மகளிர்க்குரித்தாயநறுங்குணங்கள் நம்மிடம்மலர்ந்துகமழுமேல் ஆடவர்நம்மையடிமைப்படுத்தமுடியுமோ? போதியஅறிவுவிளக்கமில்லாதநிலையிலுமே பெரும்பான்மை ஆண்மக்களை அந்தரங்கத்தில் அடக்கிஆட்சிசெலுத்துவோர் பெண்மக்களேயென்பது உலகமறிந்தபரமரகசியம். மகளிரின்குறுகியஅறிவினாலும் அற்பஆசைகளாலும் இயல்பாகத்தூயஅறிவுடைய சிலஆடவர்களும் தாழ்ந்தஎண்ணங்களுக்குள்ளாகின்றனர் என்பதும் கண்கூடு.

தவிர, மனையறம்புரியும் தலைவியர்சிற்றின்பவாஞ்சையும் அடக்கமின்மையும் மிருகப்பான்மையும் உடையவர்களாயிருப்பின் ஆடவர்க்கு ஒருசிறுஆறுதல்தான்எய்துமோ? உண்மையிலேயே பெண்மக்களை அடிமைகளாக எண்ணிநடத்துவதே ஆண்மைஎனஎண்ணும் அறிவிலிகளும்பலர்உளர். ஆனல், அன்னர் இப்பெண்மக்களுக்குச்செய்யஎண்ணும்தீங்கினும்கொடிய நான்காவது ஆடம்பரமற்றவாழ்க்கைமேற்கொள்ளல். ஐந்தாவது தேசப்பொதுவேலைகளில் ஆடவர்கட்கு உறுதுணையாகநின்று ஊக்கமளித்தல். ஆருவது தேசநிலையாதென அவ்வப்போது உணர்வதற்குச்சாதனமான பத்திரிகைகளின்ஆராய்ச்சியுடன் பிறசகோதரிகளுக்கும்எடுத்துணர்த்தல்.

இவைகளைக்கருத்திலமைத்துச் சிலமாதர்களாவது முயலத்தொடங்குவாராயின் நம்பால் அனுதாபமுடையபலசகோதரர்களின் துணைவலியும் பெறலாம். அவ்வாறின்றிப் பிறர்கண்கள்களிக்க விலையுயர்ந்த அணிகளாலும் ஆடைகளாலும் அலங்கரித்துக்கொண்டு உண்டு உலவி, அறிவைத்தூய்மைப்படுத்தாமல், மூடமக்களையீன்று பிறர்கைப்பம்பரமாக ஆடிஅலுத்து வாழ்நாள்கழித்து மறைந்துபோவதில்பயன்எய்துமோ?

எக்காலத்திலும் எத்தேசத்திலும் பெண்பாலார்களின் அறிவுவிளக்கமின்றி நன்மக்களும் புத்துணர்ச்சியும் தோன்றியதில்லை. வித்தின்விளைவு செழிப்புற்ருேங்குவது விளைநிலத்தின் வளத்தினைப்பொறுத்ததன்றி வேறுண்டோ? இதையன்றி நம்நாட்டின் உரிமைமாண்பு இவைகளை அனுபவவாயிலாக அறியாதஅன்னியர்பலரும் நம்மவரிலேசிலரும் ஆண்மக்கள் பெண்மக்களை அடிமைப்படுத்திவைத்திருப்பதாகக்குறைகூறுவது பிரசித்தம்.

நமது குற்றங்களைக்களையுநோக்கத்தால் ஆடவர்கள் தீமையைத்தமக்கே தேடிக்கொண்டவர்களன்றி வேறில்லை.

ஆதலின், ஆடவர்குற்றங்களைஎடுத்து அத்தியாயம் அத்தியாயமாக ஆராயமுற்படுவதைத்தவிர்த்து எமதுதிருவருட்பிரகாசவள்ளலார். "நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரோடு" எனத் தெய்வமணிமாலையிற்றிருவாய்மலர்ந்தருளியபடி, பெண்மக்கள் பெரும்பண்புடையவர்களாய் விளங்குவரேல், தேசப்பொருள்களும் மனைமாட்சிக்குரியவேலைகளும் புறக்கணித்து ஒதுக்கஇடம்பெறுமோ? அந்நியநாட்டுக்கைத்தொழில்களில் ஆர்வம்பெருகுமோ? நாட்டுப்பொருள்களும் கைத்தொழில்களும் நசிக்குமோ? இயற்கைக்கருவிகள்மூலையிற்கிடந்துறங்க இயந்திரங்களாகிய அசுரதேவதைகள் நம் உடலுரத்தினைக்கொள்ளமுடியுமோ? நம் இந்தியசகோதரர்களும் சகோதரிகளும் சாண்வயிறோம்பும்பொருட்டு அன்னியர்க்கடிமைப்பட்டு ஒப்பந்தக்கூலிகளாகி தீவாந்தரங்களில் இரத்தஞ்சிந்திமாள நாம் நவீனபானவஸ்துக்களை ஓயாமற்பருகமனம்வருமோ? தெய்வீகப்பசுவின்பாலைப்பாலர்கட்கருத்தாமல் வெளிநாட்டிலிருந்து அவர்களாற்றயாரித்தனுப்பப்படும் பாற்பொடிகளை ஆதரிக்கநேருமோ? அன்னியபாஷைகளிற் பட்டதாரிகளாகிக் குடும்பக்கடமையைஉதறியெறிந்து ஆங்கிலசிகிச்சாசாலைகளை அலங்கரிக்கநேருமோ?

கட்டுரைநீண்டுபோகுமாகையால் இதனைஇம்மட்டோடு நிறுத்தி நுமதுஆலோசனையில் எனதுவிருப்பங்களுக்கு இடமளிக்குமாறு வேண்டுவதோடு முடிக்கின்றேன்.

தமதுசங்கம் நீடூழிமலர்ந்து மணம்வீசிப் பல்துமாறு எல்லாம்வல்ல இயற்கைத்தேவியை வேண்டுகின்றேன்.

இப்படிக்கு.
நுமதுஅன்பையும் அநுதாபத்தையுங்கோரும்
உண்மையுள்ள,
அசலாம்பிகை.

---

# பெண்கள்சங்கம் எங்கும்பெருகுக.

திருக்கோணமலை
ஸ்ரீசண்முகவித்தியாலயம், சைவத்தமிழ்ப்பாலிகாபாடசாலைத்
தலைமைஆசிரியை
## திருமகள் க. வள்ளியம்மாள் எழுதியது.

அலைகடல்சூழ்ந்த நிலமகட்கினிய இப்பாரதகண்டத்துச் சற்சமயமாஞ் சைவசமயத்துற்பவிக்கும் பெரும்பேறெய்திய நாம், இச்சென்மம் எடுத்ததன்பலனுக யாதுசெய்தேம் என்றசிந்தனையின்றி உண்டுடுத்துறங்கு

வதிலேயே நம்வாணாளை வீணாளாக்காதவர்களாய்த் தமக்கும் பிறர்க்குமுபயோகப்படக்கூடியவழியிற் காலத்தைச்செலவிடவேண்டும். பொருள்கொடுத்தும் போனகாலத்தைத் திருப்பிப்பெற்றுக்கொள்ளமுடியாதே. நமது வாணாளோ மிக அற்பமாகும். அதிலும் இன்புறுநாளுஞ்சில. துன்புறுநாளுஞ்சில. இளமையிற் கழிவதுசில. முதுமையிற் கழிவதுசில. இவைபோக மீந்திருக்குஞ் சொற்பகாலத்துள் நாம் இருமைப்பயனையுமளிக்கக்கூடிய நன்முயற்சிகளிற்றூண்டப்படவேண்டியதவசியமாகும்.

"தேடப்படும் பொருளைச் சிக்கனவாகப் புதைத்துக்
கோடிக் கொருசிமிடங் கொள்ளுகினுங்—கூடாத
வாணாளை விண்கழிக்கும் மானிடரைப் போன்மயக்கம்
பூணார்பொய் கண்டுதுறப் போர்"

என்னும் ஆன்றோர்வாக்கு நம் வாணாளின்அருமையை விளக்குகின்றது. "மண்ணாடுமன்னவருமவர்தனமும்மாண்டனநுண்மணலையோக்கும், விண்ணாடுமிந்திரனும்அவர்வாழ்வும்போயினவிண்மீனையோக்கும், எண்ணாடும்பிரமனுமண்டமும்பூதங்களுமிறந்தனஎல்லைஇல்லை, கண்ணாடுமவையெங்கே?நின்வாழ்க்கைநிலையென்னேகவலும்நெஞ்சே!" என்னும் ஆன்றோர் கூற்றை ஆராய்ந்துணரின் உலகவாழ்க்கையானது அநித்தியமென்பது நன்குபுலனாகும். ஆகையால் நிலையற்றதாகியசெல்வத்தை நிலையெனவெண்ணாது செல்வமுள்ளபொழுதே தங்கள்தங்களாலியன்ற தானதருமங்களைச் செய்யவேண்டும். 'அறஞ்செயவிரும்பு' என்று ஔவைப்பிராட்டியார் அறைந்ததுமதுபற்றியேயாகும். நாம் செய்யக்கூடிய பலவகைத்தானதருமங்களிலும் வித்தியாதானமே விசிட்டமுடைத்தென்பது பெரியோர்கூற்றாகும். அத்தகைய வித்தியாதானமும் தற்காலத்துச் சைவச்சிறுமியர்க்காகச் செய்யப்படுமேல் மிக்க விசிட்டமுடையதென்றே சொல்லவேண்டும். சைவச்சிறுமியர் அன்னியமதவித்தியாசாலைகளுக்குச்சென்று கல்விபயில்வதால் அச்சிறுமியர்க்கும் அவர்மூலமாகச் சைவப்பெற்றோர்க்கும் பொதுவாக நம்சமயத்துக்கும் நேரும் பல்வகைத்தீமைகளையிட்டுப் பெரியோர்களும் பல பத்திரிகைகளும் தற்காலத்து மேலும்மேலும் பலவாறாக இடித்துரைப்பதால் நாயினுங்கடையேனாகிய யான் அதைப்பற்றிக்கூறுதல் மிகையாகுமென்று விடுக்கின்றேன். இவைகளையுள்ளியே யாழ்ப்பாணத்தில், சுன்னாகத்து "ஸ்ரீ ராம்நாதவித்யாலயமும்" கரவை "சரஸ்வதிவித்யாலயமும்" இன்னும் சில வித்யாலயங்களும் திருக்கோணமலையிலே "ஸ்ரீசண்முகவித்யாலய"மும் பெரியோர்சிலரால் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன. இவ்வாறு ஸ்தாபிக்கப்பெற்ற வித்தியாசாலைகளிற் பல நம்சைவசமயாசாரங்களுக்குரிய போதனைகளையும் கல்வியையும் அளிக்கச்சாவகாசமின்றியிருக்கின்றன. ஆனதால் அத்தகைய சைவப்பெண்வித்தியாலயங்களிலே பெண்குழந்தைகளுக்கும் அவர்கள்தாய்மாருக்கும் உபயோகப்படக்கூடியதான சற்பிரசங்கங்கள் காலந்தோறும் நடைபெற்றுவருதலத்தியாவசி

யகமானதே. பேதையர்க்கும் மங்கையர்க்கும் இத்தகைய சற்பிரசங்கங்களைச் செய்விப்பதற்கு ஆங்காங்குப் பலபெண்கள்சங்கம் ஏற்படுதல் சாலச்சிறந்ததாகும். பலநாட்செலவிட்டுப் பன்னூறெரிந்து பலவிதகஷ்டங்களையெல்லாம் அனுபவித்து ஓர்கல்விமானுகவருதல் மிக்க அருமையானகாரியமாகும். அது எல்லோராலும் இயலாததொன்ருகும். "கற்றலிற்கேட்டலே நன்று" என்றும், "செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம்" என்றும் ஆன்ருேர்கூறியவாருக, பல சற்பிரசங்கங்களை ஒருவன் அடுத்தடுத்துக்கேட்டு நன்குஉற்றுணர்வானுயின் அவன் காலகதியில் ஓர் சிறந்தவித்துவானுகவருதலுங்கூடும்.

பெண்களுக்கு உபயோகமாம்படி நடைபெறும் பிரசங்கங்கள் "பெண்கள்சங்கம்" என்னும் ஓர்சங்கத்தவரினுதரவில் நடைபெறுமேல்; பெண்களாயுள்ளார்யாரும் முன்னின்று பிரசங்கங்களைக் கேட்கவிரும்புவர். கற்ருேரும் மற்ருேரும் ஒன்றுசேர்ந்து இவ்விதபிரசங்கங்களை நடைபெறச்செய்வதாலும் கேட்டுத்தெளிவதாலும் உலகோர்க்கதிகபயனுண்டாகும்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ ராமநாதவித்தியாலயத்திலும் திருக்கோணமலையில் ஸ்ரீ சண்முகவித்தியாலயத்திலும் பெண்கள்சபை நியமிக்கப்பட்டு அச்சபைகளின்சார்பாகப் பல பெரியாருடைய சற்பிரசங்கங்கள் நடைபெற்றுவருகின்றன. திருக்கோணமலை "மாதர்ஐக்கியசபை"யினர் மாசமிருமுறை சைவப்பெண்களின் முன்னேற்றத்தின்பொருட்டு நற்பிரசங்கங்கள் செய்தும் செய்வித்தும்வருதல் எவர்க்கு மிக மகிழ்வைக்கொடுக்குமென்பதிற் சந்தேகமேயின்று. சைவப்பிள்ளைகள் அன்னியமதவித்தியாசாலைகளுக்குச்சென்று கல்விபயில்வதால் விளையுந்தீமைகளையெடுத்து ஏனைய தாய்மார்களுக்கும் பெண்பிள்ளைகட்கும் நன்குவிளக்கவைப்பதிலும், சமயதீட்சைபெறவேண்டிய அவசியத்தையும் மாமிசபோசனம் விலக்கப்படவேண்டிய அவசியத்தையும்பற்றி நன்குவிளக்கத்தக்க சற்பிரசங்கங்கள் நடத்துவதிலும் மாதரைக்கியசபையார் நன்கு உழைப்பதால் நம்நாட்டுக்குப் பெருநன்மையுண்டாகும். ஓர்தேசம் முன்னேற்றமடையவேண்டுமேல் பெண்கள் திருத்தமுறவேண்டும். பெண்கள்திருத்தமுறப் பெண்கள்சங்கமே இடமிடங்கடோறும் ஸ்தாபிக்கப்படவேண்டியதின்றியமையாததாகும், இவைகளையெண்ணியே தற்காலத்துப்பெண்களுள் ஓர்விதமுன்னேற்றம் இந்தியாவிற்பரவும்படி அறிவாளிகள் உழைக்கின்ருர்கள். பெண்கள்சங்கம் எங்கும்பரவப் பெருமானருளைப் பெரிதும்வேண்டி என்சிற்றுரையை முடிக்கின்றேன்.

---

# தேசபக்தி.

## ஸ்ரீமத். விபுலானந்தசுவாமிகள் எழுதியது.

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தி லிருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ?"

என்று தேசிய கவியாகிய சுப்பிரமணியபாரதியார் அன்பினால் உள முருகிப் பாடுகின்றார். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாயினாற் போல நாம் பிறந்து வளர்ந்த நாடும் நமக்கொரு கண்கண்ட தெய்வமாகவிருக்கின்றது. பராசக்தியாகிய அன்னையைத் தாயினிடத்துக் காண்பதுபோலவே தாய் நாட்டினிடத்துங் காணலாகும். இன்னுயிர்க்கு உறைவிடமாகிய இவ்வுடலத்திலிருக்கின்ற அணுக்கள்யாவும் இந்நாட்டு மண்ணிலேயிருந்துண்டாயினவன்றோ? நம்முன்னோர் ஆயிரமாண்டுகளாக வாழ்ந்த நாடு இது. அவரது பொன்னுடலத்தின் பூந்துகள் படிந்தநாடு இது. எமது தந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இன்புற்றிருந்த நாடு இது. மக்களாகிய எம்மைப் பெறும் பொருட்டாக அவர் வலம்வந்த கோயில்கள் இந்தநாட்டிலுள்ளன. இத்தகைய இத்தாய்நாட்டினை மனத்திலிருத்தி வந்தனை கூறி வாயுற வாழ்த்தவேண்டுமென்பது பாரதியாரது பாடற்கருத்தாகும்.

தாயை வழிபடும் மக்களுக்குச் செல்வம் வந்தெய்துவது போலவே, தாய்நாட்டினை வழிபடும் ஆடவருக்கும் மடநல்லாருக்கும் எல்லாவகையின்பங்களும் வந்தெய்துவனவாம். பெற்றதாய்க்குத் தீமைசெய்தோன் உய்யாதவாறுபோலத் தாய் நாட்டுக்குக் கொடுமை செய்தோன் வறுமைமுதலாகிய துன்பங்களால் இடர்ப்படுவான் என்பது.

பள்ளிக்கூடத்திலே கல்விபயிலும் நாட்களிலே தேசபக்தியென்னும் நற்பயிரானது உள்ளத்தின் கண்ணே வேரூன்றிவிடுமாயின்; பின்னரது செழித்துவளர்ந்து அருள், ஆண்மை, கல்வி, அறிவு, ஊக்கம், ஈகை என்றிவைபோன்ற நற்கனிகளைப்பயக்குமாதலால், இளம்பருவத்திலே தேசபக்தியை யுண்டாக்கும் வழி வகைகளையநுசரித்து நமது பாலியருக்குக் கல்வியறிவூட்டவேண்டும். தேசியப்பாடல் தேசசரித்திரம், தேசாபிமானிகள்சரித்திரம் என்றின்னவற்றைச் சிறுவர்க்குக்கற்பித்தல் வேண்டும்.

இங்ஙனம் செய்வது தாய்தந்தை ஆசிரியர்முதலிய குரவர்மேற் பொறுத்த கடமையாகும். நேற்றின்று தோன்றிய புதுச்சாதியார் தந்தேயத்தைப் பாராட்டுகின்றனரன்றே? அங்ஙனமிருக்கும்போது பழமையும் பெருமையுஞ் சிறந்த பாரததேயத்தை, அதன்மகவாகிய இவ்விலங்கைத் தீவினை, அதன் கீழ்பாலிருக்கும் புண்ணியப்பெரும்பதியாகிய இத்திருக்கோணமாமலையை நாம் போற்றுதற்குப் பின்னிற் போமா?

நீயே வித்தை, நீயே தருமம்!
நீயே யிதயம், நீயே மருமம்!
உடலகத் திருக்கு முயிருமன் னீயே!
தடந்தோ ளகலாச் சத்திநீ! யம்மே!
சித்தநீங் காதுறு பத்தியு நீயே
ஆலயந் தோறு மணிபெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே
ஒருபது படைகொளு முமையவ ணீயே!
கமலமெல் லிதழ்களிற் களித்திடுங் கமலைநீ!
வித்தைநன் கருளும் வெண்மலர்த் தேவிநீ!
போற்றி! வான்செல்வீ புரையிலை நிகரிலை!
இனியநீர்ப் பெருக்கினை, இன்கனி வளர்த்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை
தரித்தெனைக் காப்பாய், தாயே! போற்றி!

என்றுநமது தாய்நாட்டைப் போற்றுவோமாக.

---

# அன்னையர் மாண்பும் அவர் பெருங்கடமையும்.

"தமிழ்மகள்" பத்திரிகாசிரியை
திருமகள். மா. மங்களம்மாள் எழுதியது.

பெண்பாலார் உயர்நிலையடையப்பெறுவதைக்குறித்து, குறுகியநோக்கம் உடையவரும், தாராளசிந்தையற்றவரும், சிறியதொகையினருமான எமதுசகோதரர்சிலரின் அபிப்பிராயபேதங்களைக்குறித்து நாம் பயங்கொள்ளப்போவதில்லை. பெண்மக்கட்குச் சமத்துவம் அளிக்கப்பெற்றுவிட்டால், சுயநலவாஞ்சையுடையவரான அப்பேதையர்தம்கெதி எவ்வாறு ஆகிவிடுகின்றதோவென ஏக்கமுற்றவராகவும் இருந்துவருகின்றனர். சுதந்திர

தாபம், மனவெழுச்சி முதலான அரியகுணங்கள் சிறிதுமற்றவரான ஆண் பேதையர்களாற்றான் எமதுநாடானது உயர்பதவிஅடையப்பெறாது வீழ்நிலையுற்றுவருகின்றது. தேசநன்மையைக்கருதாது அவற்றிற்கு முட்டுக்கட்டைகள்போன்று முன்நிற்பவரான இவர்களா எமக்கு நீதிவழங்கப்போகின்றார்கள்?

நிற்க, ஆடவரும் மகளிரும் இல்வாழ்க்கைசம்பந்தமாக எவ்வாறு சமத்துவம் அடையப்பெற்றிருக்கிறார்களோ அவ்வாறுபோலவே சகலசற்கருமங்களிலும் சமஉரிமைபெறவேண்டியவர்களாகின்றார்கள். இது ஒவ்வொரு ஆண்பெண்ணுக்கும் பிறப்புரிமையாகும். இன்னொருவரினால் தானமாகக் கொடுக்கப்படுவதன்று. அறிவுசம்பந்தமாக ஆராயப்புகுவேமாயின் ஆண்அறிவு பெண்ணறிவென வேற்றுமையுடையனவாகவும் காணப்படவில்லை. அவ்வவ்வேற்றுமைகாரணமாக அறிவைஇழப்பது மடமையே.

ஆதலால், சகோதரிகளே! நாமும் எமதுஅறிவிற்கேற்ப மேலான சற்காரியங்களில் ஈடுபட்டு உழைத்தல்வேண்டும் என்னுந்துணிவுகொண்டு முன்வருவேமாயின் அவற்றைச்செய்யவொட்டாது தடுக்கமுன்வருவது ஆண்மக்கள்தம் உரிமையுமன்று. சனசமூகத்தவராற் சிறிதளவும் ஆதரிக்கப்பெறாது, கேவலமுறைபற்றிய கெட்டசெய்கைகளைச்செய்வதற்காக, ஆண்பாலினராயினென் பெண்பாலினராயினென் எவரேனும் முன்வருவரேல் அவர்செய்கையானது தேசமக்களாற்பெரிதும்கண்டிக்கப்படுவது நிச்சயம். ஆதலால் நாமும் எமதுசகோதரர்களால் நிர்வகித்து நடைபெறுவதான சகலசற்கருமங்களிலும் பங்குபற்றிச் சமத்துவமாகநடந்துகொள்ளலாம் என்பதற்குத் தடையில்லை. இவ்வெண்ணமானது ஒவ்வொருசகோதரிகள் உள்ளத்திலும் வேரூன்றப்பெற்றிருத்தல் அவசியம்.

வேதகாலம் எனக்கூறப்படும் ஆதிகாலங்களில் எமது சமூகவாழ்க்கையோ மிகவும் கீர்த்திப்பிரதாபம்வாய்ந்ததாயிருந்தது. அக்காலத்திலே சகலதுறைகளிலும் ஆண்மக்கட்கு உதவியாகப் பெண்மக்களும் கலப்புற்றே சகலகடமைகளிலும் பொறுப்பாளிகளாகவிருந்து துணைபுரிந்துவந்திருக்கின்றார்கள். அக்காலத்தில் கொற்றவர்கள் செங்கோல்செலுத்தி அரசுபுரிந்தார்கள். தசரதசக்ரவர்த்தி, மாபலிச்சக்ரவர்த்திபோன்ற மண்டலாதிபதிகள் தேசபாரத்தினைத்தாங்கிச் செங்கோலோச்சியதும் அக்காலமே. தற்காலத்தவரான எம்மைப்பார்க்கிலும், எத்தகைய மனவுறுதி, தைரியம், வீரம், சாந்தம், கற்பு முதலானவைகளில் அக்காலப்பெண்மக்கள் சிறப்புற்றிருந்தார்கள். அவர்கள் துணைகொண்டே அக்கால அரசர்கள் தமது சத்தியம், வீரம் முதலானவைகளைத் திரட்டமுடிந்தது. அரிச்சந்திரனுடைய சத்தியத்தைக் காப்பாற்றுவதற்குத் துணைபுரிந்தவள்யார்? அவனது அன்பிற்குரிய வாழ்க்கைத்துணைவியான சந்திரவதியே. காலனொடுபோராடிச் சத்தியவானின் உயிரைமீட்டவள் யார்? அவனது உயிர்த்துணைபோன்றவளா

ன சாவித்திரி என்னும் தர்மபத்தினியே. இப்படி அநேக ஆயிரம் அருந்தவ ப்பெண்மணிகள் வழிகாட்டிப்போயிருக்கவில்லையா?.

சகோதரிகளே! இந்தச்சமயத்தில் எம்மாற்கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள் பல. அவைகளுள் முக்கியமான சிலவற்றை எடுத்துக்கொள் வோம். எமது சகோதரரான ஆண்பாலார் தமக்கொருநீதி எமக்கொருநீதி யே வழங்கப்பிரியப்படுகின்றனர். அஃது யாதெனக்கேட்பீர்களேல் இல் வாழ்க்கையென்னும் குடும்பபாரமான மகாஉன்னதஸ்தானத்தை எமது பொறுப்பில்விட்டுவிட்டு எம்மை ஈாயினும் கடையரெனமதித்துவருதல். சுருங்கக்கூறுமிடத்து, சிக்கல்முக்கலான கஷ்டங்கள்யாவையும் நாம் அனு பவித்துவரத் தாம் எஜமானர் என்னும் நாமத்தையும் சூடிவருகின்றனர்.

பாரம்பரியபொறுப்பாகிய இப்பாரச்சுமையைத்தாங்கும் சக்தியான து தம்மிடத்தில் இல்லையென்பதை நன்குணர்ந்தே எம்மில்விடலானர்போ லும்! பொழுதுபுலர்ந்ததும் உலகமே தொழிற்செய்யஏவப்படுவது யாரால் என்பதைச்சிந்தியுங்கள். உலகிலே பலவித மேலானகீர்த்திவாய்ந்துள்ளவ ரான போர்வீரர், உலகெலாம் ஒருகுடைக்கீழாளும் ஏகசக்ராதிபதிகள், என்னும் இன்னோன்ன பெரியார்பலரை உண்டுபண்ணிக்கொண்டிருப்பவ ர்யார்? அத்தகைய சக்திவாய்ப்பெற்ற அழகிய நிறைகுடங்களுக்குச் சமா னமாகிய உங்கள்கூட்டத்தவரை எளனஞ்செய்துஏமாற்றிவருதல் இவர்கள் அறியாமையேயன்றி வேறுயாது? செல்வர்கள்முதல் திக்கற்ற அனாதைக ளீறுக அன்னைபோன்று அன்னம்அளித்து ஆதரித்துக்காப்பாற்றிவருகின் றவர்யார்? யாகசாலைபோன்ற வேள்விச்சாலையென்னும் உங்கள் அடுக்க ளையில் ஒருசமயம் ஆகுதியற்றுவிடுமேல் அரசாங்கம்முதல் அற்பகாரியமீ றுகத் தம்பித்துவிடுமன்றோ.

இங்ஙனமாக யாவற்றிற்கும் நிலைக்களனுகவிளங்கிக்கொண்டிருக்கி ன்ற தெய்வங்களின்றேல் உலகேது? ஆண்வீரர்களேது?

அறம்வளர்க்கப்பிறந்த அம்மைமார்களே! கற்புடைத்தெய்வங்களே!! உலகமாதாபோன்றவரான உத்தமபத்தினிமார்களே!!! பெண்மையென்னு ம் பெரிதுவக்கும் பெருமைக்குறைவிடமான பொறுமை என்னும்சாகரத் தைப் பிறப்பிடமாகக்கொண்ட உங்கள்பாக்கியத்தைப் போற்றுகின்றேன். அன்புருவமாக அமையப்பெற்றுள்ள அம்மையார்களாலாற்றப்பெறவேண் டியகடமைகளோ அநந்தம். அவைகளை மெய்யன்புடன்ஆற்ற முன்வாருங் கள். சற்கருமங்கள்யாவும் தாய்மாரையே காத்திருப்பவாகுமென்பதைச் ச த்தியத்தோடு கூறுகின்றேன். கிருகஸ்தாச்சிரமம் என்னும் இனியதெப்ப த்தை எங்ஙனமாகத் தாண்டிவருகின்றீர்கள். இவற்றைப்பார்க்கினும் பொ றுப்புவாய்ந்தபணி யாதுளது? இதுபோலவே மற்றும் உலகப்பணிகளையும் மேற்கொண்டுநடத்த முன்வாருங்கள்! பணிகள்யாவற்றிலும் உலகப்பணி

யே மேலானதாகுமென முன்னையோர் மொழியலானார். இன்னும் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என எமது நாயன்மாருள் ஒருவரான திருநாவுக்கரசுநாயனார் அருளியவாறு, மக்கள்வகுப்பைச்சார்ந்த ஒவ்வொருவரும் பணிசெய்தலையே கடனாகக்கொள்ளுதல்வேண்டும். இவ்வுலகில்மேலான அறங்களுள், அறம், பொருள், இன்பம், வீடெனப்பெறுவதான நான்குஅறங்களையும் எடுத்துக்கூறி அவற்றை எய்தற்பாலனவான வழிவகைகளையும் எடுத்துவிளக்கிக்காட்டிப் போந்தவரான ஆசிரியர் திருவள்ளுவனார்கட்டளைகட்குப் பின்னமில்லாது நல்லறங்களைச்செய்துகொண்டுபோதலே மக்கள்வகுப்பினரின்கடனாதம். அங்ஙனமாய சற்கருமங்களில் ஈடுபெற்று நடுவுநிலைமைவகித்து எவ்விதபட்சபாதகங்களுமின்றி மெய்யறங்களைப்புரிதலன்றோ மேலானசெய்கை.

"எல்லாரு மன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."

என்றருளப்பெற்றவாறு அன்புருவமான அறங்களைவளர்த்தலே அன்னையர்தம் மேலானகடன்.

எக்கருமங்களை மேற்கொள்ளுமிடத்தும் எமக்கணிகலனாகும் நான்குகுணங்களும் நான்கு இரத்தினங்கள்போன்று பிரகாசிக்கட்டும், எத்தகைய தவங்கள் இயற்றும்போதும், எமது ஆருயிரனைய பர்த்தாவின்பாதசேவையே பரமார்த்தசேவைஎனக் கொள்ளல்வேண்டும். பத்தினிப்பெண்டிர்க்குத் தத்தம்பதியையன்றி, இவ்வுலகிற் பிறிதொருதெய்வம்இன்று. அவர்கட்குப் பதிசேவையே பரமார்த்தசேவையாம்.

கற்புறு சிந்தை மாதர் கணவனே தெய்வம் என்பர், சிற்பொலி சமய வேடர் சிலையையே தெய்வம் என்பர், என்றொரு உண்மைவாக்குண்டு இவ்வுண்மையைக்கடைப்பிடித்து உத்தமிகளாய் நல்லறங்கள் நற்றவங்கள் மேற்கொண்டு நாடுசிறப்படைய நன்மக்களையீன்றுதவி நடுநாயகம் போன்று வாழ்வாராக.

---

# இந்தியப்பெண்களின் தற்காலநிலையும் அவர்தம்வேலையும்.

**R.** நாராயணஸ்வாமி, தேவாரம், மதுரைஜில்லா.

நமது பரதகண்டத்தின் நூல்களெல்லாம் ஆடவர்களைக்குறித்துக்கூறும்பொழுது பெண்களைப்பற்றிக்கூறாமலிருப்பதில்லை. சீதை, அநசூ

யை, சாவித்திரி, தமயந்தி, புனிதவதி, திலகவதி, சம்யுக்தா, தாராபாய், ஜான்சிராணி முதலியோர்போன்ற கணக்கற்றவனிதாரத்னங்கள் தோன்றி நம்நாட்டைப் பெருமைப்படுத்தியிருக்கின்றார்கள். சீதையில்லாவிட்டால் ராமாயணமில்லை. துரௌபதையில்லாவிட்டால் பாரதமில்லை. தமயந்தியில்லாவிட்டால் நளோபாக்யானமில்லை. தமிழ்நாட்டின் ஒப்பற்றகாவியங்களெல்லாம் அநேகமாகப்பெண்களைக்குறித்தே வெகுவாகவிவரித்திருக்கின்றமையை நாம் காண்கின்றோம். ஔவையாரைக்குறித்து அறியாதார் தமிழ் நாட்டிலிலரென்றேகூறலாம்.

வரதுங்கபாண்டியன்மீது அவன்சகோதரன் அதிவீரராமபாண்டியன் படையெடுத்துவர, வரதுங்கபாண்டியன் பத்தினியான மதனலீலையார்

“செஞ்சுடரோன் மைந்தனையுந் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிருந்து மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்”

என்னுங்கவியைப்பாடியனுப்பி வரதுங்கபாண்டியனைச் சாந்தப்படுத்தினர்.

ஒருநாள் ஏகம்பவாணனைச் சேரசோழபாண்டியமன்னர்களிகழ்ந்து பேச அப்பொழுது ஏகம்பவாணன் மனைவியார்,

“சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த வடிச் சேற்றில்—மானபிரான்
மாவேந்த னேகம்ப வாணன் பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கண் முடி”

என்னுங்கவியால் அவர்கள் கர்வத்தையடக்கினர்.

பூமியைப் பூமாதேவியென்றும், ஆகாயத்தை ஆகாயவாணி யென்றும், செல்வத்தை இலட்சுமி யென்றும், கலைகளைச் சரஸ்வதி யென்றும், பலத்தைச் சக்தி யென்றும் போற்றிவணங்கும் இந்தியர்கள், பெண்களை அடிமைப்படுத்திக் கேவலமாகநடத்திவருவது மிகவருந்தத்தக்கவிஷயமாகும்.

திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் சொல்லுகிறார். “நமது நாட்டின் முப்பத்துமுக்கோடிமக்களுட் பதினைந்துகோடிமக்கள் பெண்மக்களாவர். இப்பெண்மக்களுக்குக் கல்விகொடாமல் இவர்களையடிமைகளாக்கி வைத்திருந்தால் நாமுன்னேறுவதெங்ஙனம். பெண்கள்தாழ்ந்தவரெனவும் ஆண்கள் உயர்ந்தவரெனவும் கருதியதே தீது. இத்தகையகொள்கை இடைக்காலத்திலேயேயெழுந்தது. வடமொழியிலும் தென்மொழியிலும் பண்டைநாளில் இத்தீமைக்குச்சான்றுகிடையாது. நம்நாட்டுப்பெண்களை நாம் கடவுளுருவிலுங்கண்டுவழிபடுகின்றோமல்லவா? பிற்காலத்தார் பெண்ணென்றால் இழிந்தபிறப்பென்றும் பாவவுருவென்றும் பெண்கள்மெய்ந்நூல்கள் படித்தல்கூடாதென்றும் கருதுவாராயினர்.”

மனு கூறுகின்றார்:— "எத்தேசத்தில் பெண்களை மரியாதையுடன் நடத்துகின்றார்களோ அத்தேசம் சீர்சிறப்புடனிருக்கின்றது. அநேகஞானிகளையும் வீரர்களையும் பெற்றெடுத்த ஞானத்தாய்மார்கள்—வீரத்தாய்மார்கள் வழியாகவந்த நம்அன்னைகளைச் சகோதரிகளை அடிமைகளாக வைத்திருப்பது கேவலம்! கேவலம்!! அந்தோ; அவர்கள்மோகத்தையடக்குங் கருவிகளாக, பிள்ளைகளையுண்டாக்கும் யந்திரங்களாக அடுப்பூதிகளாகக் கருதப்படுகின்றார்கள். பார்வதியைச்சிவன்வாமபாகத்திலும் இலட்சுமியைவிஷ்ணு மார்பிலும், சரஸ்வதியைப்பிரமா நாவிலும் வைத்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றனவே. இமாலயத்தில் சிவனும், குமரியில் சக்தியும் கோவில்கொண்டெழுந்தருளியிருப்பதின் தத்வம் கவனிக்கத்தக்கது. பட்சிகளும் மிருகங்களும், தத்தம் பெண்ணினங்களை எவ்வாறுகாப்பாற்றிக் களிப்பிக்கின்றன கவனிக்க! கவனிக்க!!.

பால்மணம்மாருக்குழந்தைகளுக்கு விவாகங்கள் நடத்துகிறார்கள். சாதாரணமாகப்பலரும் கல்யாணவைபவத்தைக் கண்டுகளிக்கவிரும்புகின்றனரேயன்றி, மணமக்களுக்குண்டாகுங் கஷ்டங்களைநினைப்பதில்லை. சமூகவழக்கம் மதமென்றபெயரால் இத்துர்வழக்கம்சிலஜாதியாருள் அதிகமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. தமிழர் ஆதியில் இவ்வழக்கத்தையறியாதிருந்தனரென்பது எவருக்கும் நன்குதெரியலாகும். விவாகமே இன்னதென்று அறியாவயதிற்செய்யும்மணந்தான் மணமாகி மணக்குமோ? பருவமடைந்தபின்விவாகம்நடத்திவந்த நம்தேசத்தில் முகம்மதியர்படையெடுப்பால், இத்தீயவழக்கம் ஹிந்துசமூகத்திற்புகுந்து இன்றளவும் நின்று நிலவிவருகின்றது. உலகவிஷயங்களை நன்குஅறியாவயதில் மனைவி வீட்டுக்காரி காதற்கிழத்தி சகி வாழ்க்கைத்துணைவி பாரி என்றவைபோன்றபட்டங்களுடன் குடும்பபாரந்தலைக்கேறியதுமட்டுமின்றி, கணவனைச்சந்தோஷப்படுத்துவதுடன், மாமனார், மாமி, மைத்துனர், வேலைக்காரர் முதலானவர்களுக்கெல்லாம்திருப்தியாகநடக்கவேண்டியிருக்கிறது. வளர்ச்சியடையாதவயதிலுண்டாகுங் கருப்பவேதனையையும் அவ்வயதிற்பிறக்கும் சிசுவின்தன்மையையும் விரிக்கிற்றுயரமே. நம்நாட்டில் அதிகமான சிசுமரணத்திற்குக்காரணம் முதலாவது பால்யவிவாகமென்பதையெவர்மறுக்கமுடியும்.

"அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வண்ணமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்".

என ஆன்றோராற்குறிக்கப்பட்ட உண்மையையறியாதிருக்கும் இளம்பிராயத்தில் வாழ்க்கைப்படும் பெண்கள்நிலை பரிதாபம்! பரிதாபம்!!.

தாமாகவே கணவனைவரித்த நம்சகோதரிகள், இக்காலத்தில் சந்தைகளில்விற்கப்படும் மாடுகள்போன்று விற்கப்படுகின்றார்களென்றேசொல்லவேண்டியிருக்கிறது. பிராயப்பொருத்தம், குணப்பொருத்தம், அழகு

ப்பொருத்தம், அறிவுப்பொருத்தம் முதலியவைகளையுங்கூடக் கவனிக்கவேண்டும். ஒன்றையுமே கவனியாதுவிட்டாலும் மனப்பொருத்தத்தையாவது மதித்து, பெண்கள்காதலிக்கும் காதலர்களை மணக்கும்படிசெய்யவேண்டியது கடமையாகும். தருதியற்றோர்களைவிரும்பும் பெண்களுக்குத் தக்கவாறுபுத்திபுகட்டி, மனதைச்சரிசெய்து விவாகம்நடத்தவேண்டுமேயல்லாது பெண்களைக்கட்டாயப்படுத்தி மணஞ்செய்விப்பது நன்றன்று. பலவந்தமானவிவாகங்களே குடும்பசச்சரவுக்கு முதற்காரணம். சிலபாவங்களுக்கும் இதுகொண்டுசெல்கின்றது. அநேகம் உத்தமஸ்திரீகள் "புல்லென்றாலும் புருஷன், கல்லென்றாலும் கணவன்" என்பதை மனதிற்சிந்தித்துக்கொண்டு தங்கள் வாழ்நாட்களையெல்லாம் கொடியகணவர்களிடம் கஷ்டப்பட்டுக்கொண்டே கழிக்கிறார்கள். இவ்வாறாகவே மிருகம்போன்ற மனைவிமார்களிடம் துன்பப்படும் நாயகர்களுமநேகரிருக்கின்றார்கள். இந்நாட்டில், கைம்பெண்களுக்குச்செய்துவருங் கொடுமைகளையீண்டுச் செப்பத்தரமன்று. சுமார் மூன்றேகால்லக்ஷம் சகோதரிகளை மதத்தின்பெயரால்வாட்டிக்கொண்டு, தேசமுன்னேற்றத்தையும் சமூகமுன்னேற்றத்தையும் பாழ்படுத்துகிறோம்.

விதவைகளில் இயற்கையின்சக்தியைத்தாங்கமாட்டாது தற்கொலைசெய்துகொண்டவர்களெத்தனைபேர். குடும்பங்களிலிருந்து ஓடியவர்களெத்தனைபேர். கற்பு அழிவுக்காக மருந்துட்கொண்டு கஷ்டப்பட்டவர்களெத்தனைபேர். சிசுக்கொலைசெய்தவர்களெத்தனைபேர். சமூகக்கட்டுப்பாடுகளைத் தாங்கமாட்டாது அயல்மதங்களிற் பிரவேசித்தவர்களெத்தனைபேர் இவ்வாறு கைம்பெண்களையதோகதிக்கு ஆட்களாக்கிக்கொண்டிருக்கிறோம்.

"ஆயிரக்கணக்கானவிதவைகள் நந்தேசத்திலிருக்கிறவரையில், வெடிச்சுரங்கத்தின்மீது நாம் உட்கார்ந்துகொண்டிருப்பதாகவே நினைத்துக்கொள்ளவேண்டும். அந்தவெடி சமயம்நேரிடும்போது வெடிக்கும். நாம் புனிதர்களாகவேண்டுமானால் இந்தக்கட்டாயவைதவ்யம் என்பதையொழிக்கவேண்டும்" என்று காந்தியடிகள் தமது "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதுகிறார்.

பெண்களுக்குக் கல்விகட்டாயங்கொடுக்கவேண்டுமெனப் பத்திரிகைகள் பலவாண்டுகளாக வெளியிட்டுவெளியிட்டுச் சலித்துவிட்டன. உபந்யாசகர்கள் பலவிடங்களில் பலமுறை பலவருடங்களாகப்பேசிப்பேசியலுத்துவிட்டார்கள். அநேகசங்கங்களில் தீர்மானஞ்செய்து காகிதத்திலெழுதிவைக்கிறார்களேயன்றிச் செயலிற்காட்டுவோரில்லை. எவ்விடத்திலோ சிலர்செய்தும்வருகிறார்கள்.

''விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்''

என்பது வள்ளுவர்வாக்கு. "உலகிற்கேயொருபெரும் புதையல்கிடைத்திருக்கிறது. அது என்னவெனில், நாம்பெண்களின் உபயோகங்களையறிந்து

கொண்டோம்" என்று ஒரு அமரிக்க தத்துவசாஸ்திரிகூறுகின்றார். மண்டனமிசிரருக்கும், சங்கராருக்கும் சாஸ்திரவாதம் நடந்தபோது நியாயத்தலைவியாகவிளங்கியவர் மண்டனமிசிரரின் பாரியாரல்லவா?

முற்காலத்திலே நமது பெண்கள்கல்விகற்று வித்வாம்சைகளாகவும், பண்டிதைகளாகவுமிருந்து, தத்தம்புருஷர்களில்லாதபொழுது தங்கள் மக்களுக்கும் சிஷ்யர்களுக்கும் வித்தைபோதித்துவந்தார்களென நாம் நூல்களின்மூலமறிகின்றோம். "கல்வியின்மையே எல்லாத்தீங்குகளுக்கும்காரணம்" என்றார்புத்தபிரான். எத்தனையோபடித்தபெண்மணிகளையீன்ற நம்நாடு இப்போது எந்நிலையிலிருக்கின்றது அந்தோ கேவலம்! கேவலம்!! பெண்களுக்குக்கல்விகொடுத்தால் வானமிடிந்துவிழுமா? பூமிதான்பிளந்துவிடுமோ? அல்லது சமுத்திரந்தான்பொங்கிப் புவியைநாசமாக்கிவிடுமோ? யாதெனத்தெரியவில்லை.

மாதர்களெல்லாம் கற்றவர்களாயிருந்தால் அவர்களிற் கணக்கற்றஅறிஞர்கள் தேசநன்மைக்காகப் பலதுறைகளிலும் முயற்சிப்பார்கள். இவர்களால் தேசமடையும் நன்மைகளோபலவாகும். ராஜாராம்மோகனராய் ஈஸ்வரசந்திரவித்தியாசாகர், மலபாரி முதலியோர்போன்று, பெண்கள் சமூகத்திற்காகப்பாடுபடும் தேசாபிமானிகள் நம்நாட்டில் அநேகர்தோன்றாதது மிகவருந்தத்தக்கதே. நாடு ஆங்கிலமாகமாறிக்கொண்டேவரத் தலைப்பட்டுவிட்டது. நகரஸ்திரீகள் ஆங்கிலநடை, உடை, ஊண் ஆதியவற்றைவிரும்பிக்கொண்டுவருவதையும், கிராமப்பெண்கள் அறிவிலிகளாகிவருவதையுங்காண நாட்டுப்பற்றுடைய எவரும் மௌனமாகவிருக்கநியாயமில்லை.

சகோதரிகளே! நீங்கள் வெகுகாலமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். "பெண்ஜென்மம் புண்ஜென்மம்" "பெண்ஜென்மம் பாவஜென்மம்"என்றபழமொழிகளுக்கு நீங்கள் தற்சமயம் இலக்காகவிருக்கிறீர்கள். உலகத்தில் ஒருவிதநூதனசக்தியுதயமாகித் ததும்பித்தாண்டவமாடுவது நீங்களறியாததா? மாதரியக்கந்தோன்றியிருக்கிறது கான்பூரிற்கூடிய பாரதஜனசபையில் ஸ்ரீமதி சரோஜனிதேவி யக்கிராசனம்வகித்ததே உங்களுடைய பிற்காலத்துக்கான சுபஅறிகுறிகளிலொன்று. உங்கள்முன்னேற்றம் உங்கள்வசமேயிருக்கிறது. உங்களையறியாமையில் அடிமைப்படுத்தியிருக்கும் வரையிற் பாரததேவியடிமைப்பட்டவளே என்பதை உங்கள் ஒற்றுமையாலும், ஊக்கத்தாலும் உழைப்பாலும், ஒழுக்கத்தாலும், ஆண்மக்களுக்குக்காட்டி, அவர்களையன்பால் உங்கள்பக்கம் இழுத்துக்கொண்டு, உங்கள் குறைகளையெல்லாம் நிவிர்த்திக்கவழிதேட முயலுங்கள்.

"இந்து ஒருவன் உலகத்திலிருக்கும்வரையில் சீதை மறக்கப்படாள். பலராமர்களை நாம்பார்க்கமுடியுமென்றாலும், வேறு ஒருசீதையைப் பார்க்கமுடியாது," என்று ஸ்வாமி விவேகானந்தர் பாரதப்பெண்மணிகளைக்குறித்துப்பேசுகையிற் கர்ஜித்திருக்கிறார். வருங்காலசுதந்திர இந்தியா

தருமஇந்தியா-ஞானஇந்தியா- வீரஇந்தியா- நாகரீகஇந்தியா-உங்கள் உழைப்பாலேயே உண்டாக்கப்படவேண்டியிருக்கிறது. இதனை நீங்கள் உள்ளத்திற்கொள்ளவேண்டும்.

ஓம் சாந்தி.

---

# தேவாஸுரயுத்தம்.

## சகோதரி R. S. சுபலக்ஷ்மியம்மாள் B. A. எழுதியது.

கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டுள்ள அநேககோடிசிருஷ்டிகளுள் மனிதனேமேலானவன். நமக்கு மூளையென்னப்பட்ட ஒருசிறந்தஉறுப்பும் அதனால் விஷயங்களையறிதல், உணர்தல், தீர்மானித்தல் என்னும் சக்தியும் சர்வஜீவதயாநிதியாற் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் நமது அறிவைவிருத்திசெய்வதால் பாபபுண்ணியம், நன்மைதீமை, நியாய அநியாயம்முதலானவற்றைப்பகுத்தறியும் சக்தியுமுளது. "அரிதரிது மானிடராதலரிது"இப்படிப்பட்ட அருமையானமனிதஜன்மத்தை யடைந்தநாம் செய்யவேண்டிய உயர்ந்தகடமை யாது? என்பதையாராய்வோம்.

மனிதன்ஒவ்வொருஜன்மத்திலும் கல்வி கேள்வி அநுபவம் இவற்றினால் அறிவுவிருத்தியடைந்து மேன்மேலும் பரிபக்குவமடைந்து ஒவ்வொருமுறையுஞ் சற்றுஉயர்ந்தஜன்மத்தையேயடைந்து கடைசியில் உள்ளும்புறம்பும் மிகுந்த பரிசுத்தமான தன்மையையடைந்து தேகத்தைமறந்து அறிவேமயமாய் கடவுளுடன் இரண்டறக்கலக்கும்படியான பரிபக்குவத்தையடைகிறான்.

இப்பரிபக்குவத்தையடைவது யாங்ஙனம்? நம்மனத்திற்சர்வகாலமும் நன்மை தீமை இவ்விரண்டிற்கும் போராட்டம் இருந்துகொண்டேயிருக்கிறது.

இதைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு சிறியகதையுளது:—

ஒவ்வொருகுழந்தையும்பிறந்தவுடன் அதன்மனதின்நடுவில் ஒருஉயர்ந்தபலிபீடமிருக்கிறது. இருபுறத்திலும் கெட்டதேவதையொன்றும் நல்லதேவதையொன்றும் இருந்துகொண்டு அப்பீடந்தானுட்காருவதற்கே உரித்தானதென்று விவாதித்துக்கொண்டிருக்கின்றன. கெட்டதேவதை எப்போதுங்கெட்டகாரியங்களையே செய்யும்படி தூண்டுகிறது: 'நீ இதைத்திருடு நீ பொய்சொல்லு யாரும் இவற்றையறியமாட்டார்கள்' என்று போதிக்கிறது. நல்லதேவதைநன்மையையேசெய்யஏவுகிறது: 'பொய்சொல்வது பாபம்' வேறியாருக்குந்தெரியாவிட்டாலும் நீசெய்யுந்தவறுகள் கடவுளுக்

குத்தெரியும்: அவரம்சமாய் உன்னுள்ளிருக்கும் அந்தராத்மாவுக்குத்தெரியும். ஆதலின் நீ எப்போதும்நல்வழியிலே செல்லவேண்டும், என்றுசொல்கின்றது. இந்தக்குழந்தை இயற்கைக்குணத்தாலும் பெற்றோர்பழக்கத்தாலும் சகவாசதோஷத்தாலும் எந்தத்தேவதையையதிகமாய்க் கீழ்ப்படிகின்றதோ அந்தத்தேவதை இந்தக்குழந்தையின் 15 அல்லது 16 ஆவதுவயதில் நடுவிலுள்ளபீடத்தில் உட்கார்ந்துவிடுகிறது. அதாவது அந்தவயதுக்குப்பிறகு அந்தக்குழந்தை ஒருஸ்திரபுத்தியையடைந்து சிறுவயதுப்பழக்கத்திற்கேற்ப நற்குணமுடையதாகவோ அன்றித்துர்க்குணமுடையதாகவோ வந்துவிடுகிறது.

அதாவது நம் ஒவ்வொருவருள்ளும் கெட்டகுணங்கள் நல்லகுணங்கள் இவ்விரண்டும் நிறைந்திருக்கின்றன. நம்முடையமனச்சாக்ஷியென்பது இடையிலிருந்து இவ்விரண்டையும் பார்த்துக்கொண்டிருக்கிறது. இவ்விரண்டு வகுப்புக்குணங்களும் எப்போதுஞ்சச்சரவிட்டுக்கொண்டே இருக்கின்றன. நல்லவிஷயங்களைக்கேட்கும்போதும், சத்சகவாசத்தையடையும்போதும் நல்லகுணஞ்சற்றுமேலோங்கிநின்று தீயகுணங்கள் அடங்கியிருக்கின்றன. மற்றுஞ்சிலசமயங்களில் அறிவுகுறைந்து கோபம், காமம், அகங்காரம்முதலான கெட்டகுணங்கள்ஜெயத்தையடைகின்றன. நம்முள்ளிருக்கும் முக்கியமானகெட்டகுணங்கள்ஒன்பது.அவை: காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம், டம்பம், தர்ப்பம், ஈர்ஷை என்பன. இவைகளே அசுரர்கள். நமக்குள்ளிருக்கும் நல்லெண்ணங்களே தேவதைகள்: இவ்விரு கூட்டத்தாருக்கும் எப்போதும் ஓய்வின்றிச்சண்டைநடந்துகொண்டேயிருக்கிறது. ஆதலின் மனிதஜன்மமடைந்த நமதுகடமையாது என்றால் நம்முடைய அறிவைவிருத்திசெய்து அவ்வறிவினால் நம்முள்ளிருக்கும் அசுரர்களைத்தோற்கச்செய்து நன்மையாகிய தேவர்களைஜெயிக்கச்செய்து அதனால் நாம்அடையக்கூடிய மனஅமைதி, சாந்தம், பூததயை, ஈஸ்வரபக்தி, பரோபகாரம்முதலியவற்றை விருத்திசெய்தல். நமது ஒவ்வொருபுராணத்தின் உட்கருத்தும் இதுவே. உதாரணமாக: இராமாயணத்தை எடுத்துக்கொள்வோம் சீதை பரமாத்துமாவின் அம்சமாகிய ஜீவாத்மா; ஸ்ரீராமர் பரமாத்மா. பத்துத்தலைராவணன் ஜீவாத்மா பரமாத்மாவைக் காணவிடாமற்கட்டுப்படுத்தும்(சிறைபிடித்துவைத்துள்ள)பத்துவகைக்குணங்கள். ஹநுமார் பரமாத்வாவுடன் ஜீவாத்மாவை ஐக்கியப்படுத்தச் சாதனமாயுள்ள அறிவாகிய குரு. பத்துத்தலையுடன்கூடிய ராவணனைவெல்வது நமக்குள்ளிருக்குங்கெட்டகுணங்களைஜெயித்து, அவைகள் தலையெடுக்கவிடாமற் செய்தல். இன்னும் ஒரு உதாரணம்:

தற்காலம் தசராஎன்னும் நவராத்திரிநடக்கிறது. 10ம்நாள் மஹிஷாஸுரமர்த்தனி மஹிஷாஸுரனைச் ஸம்ஹரித்து ஜெயமடைகின்றாள்!

அதாவது என்ன?

மஹிஷம் என்றால் எருமை. எருமை ஒரு மந்தமான முரட்டுத்தனமான மிருகம். இதுவே நமக்குள்ளிருக்கும் அறிவின்மை. இது ஒரு அஸு

ரன். இவ்வஸுரனை மர்த்தனஞ்செய்து நமது அறிவையும் ஞானத்தையும் நாம்ஜெயிப்பதற்கு உதவிசெய்யுங்கடவுளே மஹிஷாஸுரமர்த்தனி.

இன்னும் ஒரு உதாரணம்: பாற்கடல் கடைந்து அமிர்தம் எடுத்ததாகஒருகதையுண்டு. பாற்கடல் நம்முள்ளிருக்கும் அறிவு, பரிபக்குவமாகாத அறிவு நம்முள்ளிருக்குங்கெட்டகுணங்கள் நல்லகுணங்களாகிய அசுரர்களும் தேவர்களும் அந்த அறிவாகியபாற்கடலைக் கடைந்து அதன் சாரமாகிய சச்சிதானந்தமாகிய அமிர்தத்தையடைந்தது கடவுள்கிருபையால் அறிவுபரிபக்குவமடைந்து மனச்சாந்தியும் சச்சிதானந்த நிலைமையையும்அடைவது.

ஆதலின் என் அரியசகோதரிகளே! கேவலம் அழிந்துபோகக்கூடிய இந்தத்தேகத்தைப் போஷிப்பதிலும் வளர்ப்பதிலுமே நமதுகாலத்தையெல்லாஞ் செலுத்தாமல் நமது அறிவுவிருத்தியடையவும் நம்முள்ளிருக்கும் அசுரர்கள் [கெட்டகுணங்களாகிய] மாளவும் நல்லகுணங்களாகியதேவர்கள் மேன்மேலும் விருத்தியடையவும் அதனால் நமக்கு நம்மையாளுங்கருணாநிதியிடம் பக்திபெருகவும் வேண்டியமுயற்சியை நாம் ஒவ்வொருவருஞ்செய்வோமாக.

ஓம் தத்ஸத்.

---

## உலகத்தின் உற்பத்தி.

---

சென்னை திரு. தி. க. இராஜராஜன் B. A. அவர்கள்

எழுதியது.

நாம் வசிக்கும் இவ்வுலகம் சுழன்று கொண்டிருக்கும் ஒருகோளம். நமக்கு இவ்வுலகம் மிகப்பெரிதாகத் தோன்றினாலும் அது அளவுகடந்த வெளியாகிய ஆகாயத்தில் ஒரு அணுவுக்குச் சமானம். ஆகாயத்தின் பெரும்பாகம் ஒன்றுமில்லாத வெறும் வெளியாகவே இருக்கிறது. அவ்வெட்ட வெளியில் இடையிடையே அனலும் வெளிச்சமும் வீசும் பல ஒளிநிலைகள் உள்ளன. அவ்வொளிநிலைகளையே நாம் நட்சத்திரங்கள் அல்லது விண்மீன்கள் என்று சொல்கிறோம். ஆனால் அந்நட்சத்திரங்கள் ஆகாயத்தில் நிலையாக நிற்பதில்லை; இடம் மாறிக்கொண்டேயிருக்கின்றன. நட்சத்திரங்களுக்கு இயக்கம் உண்டு என்னும் உண்மையை மனிதர் பல ஆண்டுகளாக அறியாமலேயிருந்தார்கள். அவை அளவுகடந்த தூரத்தில் இருப்

பதால் அவைகளின் ஓட்டம் நமக்குப் புலப்படுவதில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பின்னரே அவை இடம் மாறுவதை நாம் அறியக்கூடும். நட்சத்திரங்கள் உருவத்திற் பிரம்மாண்டமானவைகளாயிருந்தும், அவை அநேககோடி மயில்களுக்கப்பால் இருப்பதால், நாம் மிகச் சிறந்த தூரதிருஷ்டிக்கண்ணாடியால் அவைகளைப் பார்க்கும்பொழுதும் அவை ஒளி கூடினவும், ஒளிகுறைந்தனவுமான சிறு புள்ளிகளாகவே தோன்றுகின்றன. அவற்றிற்சில, தூரதிருஷ்டிக்கண்ணாடியால் பார்க்கும்பொழுது சுழன்று கொண்டிருக்கும் ஒளியுள்ள ஆவியாலாகிய முகில்கள்போல் தெரிகின்றன. அவற்றிற்கு ஆங்கிலத்தில் வெண்படலம் அல்லது உடுத்திரை என்னும் பொருள்பட 'நெபுலே' என்று பெயரிட்டிருக்கிறார்கள். நட்சத்திரங்கள் அளவுகடந்த தூரத்தில் இருப்பதால் அவைகள் கோடிக்கணக்கான மைல்கள் ஓடினபொழுதிலும் அவைகளின் அசைவு சிறிதும் நமக்குப் புலப்படுவதில்லை.

ஒரு நட்சத்திரம் மாத்திரம் நமக்கு மிகவும் அருகில் இருப்பதால், அது சுடர் விட்டெரியும் ஒரு பெரிய நெருப்புப் பந்துபோல் தோன்றுகிறது. அதுதான் சூரியன். சூரியனும் மற்ற நட்சத்திரங்களைப் போன்ற ஒரு நட்சத்திரமே. ஆனால் மற்றநட்சத்திரங்கள் இருக்கும் தூரத்தையும் இதன் தூரத்தையும் ஒத்துப்பார்க்கும் பொழுது, சூரியன் வெகுசமீபத்திலிருப்பதால், அதன் தோற்றம் அவைகளைப்போலில்லாமல் மாறுபட்டுத் தோன்றுகிறது. சூரியன் கிட்டவிருப்பதாற்றான் மனிதர் அதன் இயல்பைப்பற்றிச் சிறிது அறிதற்கு இடம் நேர்ந்தது. பூமியிலிருந்து சூரியன் குறைந்தது ஒன்பது கோடியே மூப்பது லட்சம் மைல் தூரத்தில்உள்ளது. அது பூமியைவிடப் பன்னிரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் மடங்குபெரிது.

மேற்கூறிய அளவுகள் நம்மனதுக்கெட்டாதவைகளாக விருக்கின்றன. மிகவும் வேகமுள்ள பீரங்கியிலிருந்து சூரியனுக்குநேரே சுடப்பட்ட ஒருகுண்டானது, பீரங்கிவாயிலிருந்து புறப்படும்பொழுது தனக்கிருந்த வேகம் குன்றாது செல்லுமானால், அது, சூரியனையடைய எழுவருடம் செல்லும். ஆயினும், மற்றநட்சத்திரங்களிருக்கும் தூரத்தைக்கவனிக்கும் பொழுது சூரியன் பூமிக்கு அருகிலிருப்பதாகச் சொல்லுகிறோம். இவ்வுலகத்தை ஓர் அங்குலம் குறுக்களவுள்ள ஒரு சிறு உருண்டையாகக் கொள்வோமானால், சூரியன் ஒன்பதுஅடி அல்லது நூற்றெட்டு அங்குலம் குறுக்களவுள்ள ஒரு பந்தாகும். சூரியன் பம்பரம்போற்சுழன்று கொண்டேயிருக்கிறது. ஆனால் அது கனலும் ஒளியுமுள்ள அக்கினிப்பிழம்பாகவிருப்பதனால் அதன் துருவங்களிலுள்ள பாகங்களும், அதன் மத்தியரேகையிலுள்ள பாகங்களும் ஒரேவேகத்துடன் சுழல்வதில்லை; முனையிலுள்ளபாகங்களின் ஓட்டம் குறைவாகவும், நடுவிலுள்ள பாகங்களின் ஓட்டம் அதிகமாகவும் இருக்கும். சூரியன் மத்தியரேகையிலுள்ளபாகம் ஏறக்குறைய இரு

பத்தைந்துநாளுக்கொருமுறை சுற்றிவருகிறது. நமது கண்ணுக்குப்புலப்படும் சூரியனின்மேற்பாகம், அதைச்சூழ்ந்துகொண்டிருக்கும் உலோகங்களின் ஒளியுள்ள ஆவிகளினாலாய முகில்களே; அவற்றினுள்ளேஇருப்பதை நாம் அநுமானித்தறிந்துகொள்ளலாமேயன்றி நேரிற்கண்டறியமுடியாது. சூரியனின் வெப்பமிகுதியினால் அதனிடத்துள்ள இரும்பு, வெள்ளிரும்பு அல்லது நிக்கில், செம்பு, வெள்ளீயம் அல்லது தகரம் முதலிய உலோகங்களெல்லாம் ஆவியாகவிருக்கின்றன. சூரியனைச்சுற்றி நமது பூமிமாத்திரமல்ல, கிரகங்கள் என்றுசொல்லப்படும் இன்னும் இதைப்போன்ற அநேக கோளங்களும் சுற்றிவருகின்றன. சூரியனுடையஒளியை இக்கிரகங்கள் பிரதிபிம்பிப்பதனால் இவை ஆகாயத்தில் பிரகாசிக்கின்றன. நாம் இவைகளினுடைய ஓட்டத்தையும், அசைவையும் எளிதில் காணக்கூடியஅளவு சமீபத்தில் இக்கிரகங்களிருக்கின்றன. நட்சத்திரங்களோடு ஒத்துப்பார்க்கும்பொழுது இவைகள் ஒவ்வொருஇரவும் இடம்மாறிவருகின்றன. நட்சத்திரங்கள் இடைவிட்டு மின்னுந்தன்மையுள்ளன. கிரகங்களோ அங்ஙனமின்றி ஒரேமாதிரியாக இடைவிடாமல் ஒளிவீசிக்கொண்டிருக்கும். இதனால் நாம் நட்சத்திரங்கள்எவையென்றும் கிரகங்களெவையென்றும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

ஆகாயம் மிகப்பெரிய அகண்டவெளியென்பதை நாம் அறிந்துகொள்வது அவசியம். நாம் முன்சொல்லியவாறு சூரியனை ஒன்பது அடி குறுக்களவுள்ள ஒருபந்தாகக்கொள்வோமானால், அதற்கேற்க நமதுபூமி ஒருஅங்குலம் குறுக்களவுள்ள ஒருபந்தாகவும், சூரியனிடத்திலிருந்து முன்னூற்றுமுப்பது கஜதூரத்திலுள்ளதாகவும் இருக்கும். சந்திரன் பூமியிலிருந்து இருபதுஅங்குலதூரத்தில் ஒருமிளகளவுள்ளதாயிருக்கும். பூமிக்கும் சூரியனுக்குமிடையிலும், பூமியைவிடச் சூரியனுக்குச்சமீபத்திலும் சந்திரனைப்போன்ற இரண்டுசிறுகிரகங்கள்இருக்கும். அவைதான் புதனும் வெள்ளியும். அவை முறையே சூரியனிலிருந்து நூறுகஜதூரத்திலும் இருநூறுகஜதூரத்திலுமிருக்கும். பூமிக்குப்பின்னால் செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்சூன் என்னுங்கிரகங்கள் முறையே 500, 850, 3000, 6300, 10000 கஜதூரத்தில் உள்ளனவாகத்தோன்றும். இவைகளல்லாமல், இவைகளைவிடச் சிறியவேறுசிலஅணுக்களும் இக்கிரகங்களுக்கிடையே பறந்துகொண்டிருக்கும். அவ்விதமானஅணுக்கள் அநேகம் செவ்வாயையும் வியாழனையும் சுற்றிக்கொண்டிருக்கும். இவற்றிற்குமப்பால்உள்ள அளவுகடந்த வெளியிலிருந்து அடிக்கடி சிறுஒளிவீசும் ஆவியும் துகளும் வந்துகொண்டிருக்கும். அப்புகைகளுக்கே தூமகேது அல்லது வால்வெள்ளி என்று

பெயர். இவைகளைச்சுற்றியும், நம்மைச்சுற்றியும், எல்லாப்பக்கங்களிலுமுள்ள அளவுக்கெட்டாததூரம் வியாபித்திருக்கும் அகண்டவெளியான ஆகாயமானது குளிர்ந்தும், ஒருவித சீவராசிகளில்லாமலும், வெறும் வெளியாகவும், நிசப்தமாகவும் இருக்கிறது. பூமியை ஓர் அங்குலம் குறுக்களவுள்ள ஒருபந்தாகவும், சந்திரனை ஒருமிளகளவாகவும் கொள்வோமானால் நமக்குமிகவும் கிட்டவிருக்கும் நட்சத்திரமானது நாற்பதினாயிரம் மைலுக்கப்பால் இருக்கவேண்டும்.

இவைகளைப்பற்றியவிஷயங்களையும், அவ்விஷயங்களை நாம் எவ்விதம் அறிந்துகொண்டோம் என்பதையும்பற்றிச்சொல்லும் சாஸ்திரத்திற்கு வானநூல் என்றுபெயர். சூரியனைப்பற்றியும் நட்சத்திரங்களைப்பற்றியும் அதிகமாய்அறியவிரும்புவோர் வானநூற்புத்தகங்களைப் படிக்கவேண்டும். பூமியின் தன்மையைப்பற்றியும், பூமியின் மேற்தோற்றத்தைப்பற்றியும் வர்ணிக்கும் நூல்கள் முறையே நிலநூல் (Geology) நிலப்பொருள்நூல் அல்லது பூமிசாஸ்திரம் என்பவையாம்.

பூமியின்குறுக்களவு ஏறக்குறைய எண்ணாயிரம்மைல். பூமியின்மேற்பரப்பு ஒரேசமமாகவில்லாமல் கரடுமுரடாயும், மேடுபள்ளமுள்ளதாயும் இருக்கிறது. அம்மேடுகளே மலைகள் பள்ளங்களில் தங்கியிருக்கும் மெல்லிய ஏடுபோன்ற நீர்ப்பூச்சே கடல்களும் சமுத்திரங்களுமாம். மேற்கூறிய நீர்ப்பூச்சாகிய கடல்களும் சமுத்திரங்களும் ஐந்துமைல் ஆழத்திற்குமேற்பட்டனவல்ல. சமுத்திரங்களில் அதிகஆழமானசமுத்திரம் ஐந்துமைல் ஆழமுள்ளது. ஆகையால் உலகத்தின்பருமனுக்கு இவ்வைந்துமைல் எம்மாத்திரம். உலகத்தின்பருமனோடு இவ்வைந்துமைல் ஒப்பிடும்பொழுது இதுவெகுசொற்பமே.

இவ்வுலகத்தைச்சுற்றிக் காற்று படலம்போல் மூடிக்கொண்டிருக்கிறது. அக்காற்றுப்படலமே வாயுமண்டலம் என்பது. நாம் ஒருபுகைக்கூண்டில்ஏறி மேலேசெல்லும்பொழுதாவது, அல்லது சமுத்திரமட்டத்திற்குமேல் உயர்ந்தமலையின்மீதுஏறி உச்சிக்குச்செல்லும்பொழுதாவது நம்மைச்சுற்றியிருக்கும்காற்று வரவர அடர்த்தியிற்குறைந்துகொண்டேவந்து கடைசியில் மூச்சுவிடுவதற்கும் முடியாமற்போய்விடும். அவ்விடங்களில் எவ்விதமான உயிரும் வாழமுடியாது. சமுத்திரமட்டத்திற்குமேல் இருபத்தைந்துமைலுக்கப்பால் சிறிதளவும் காற்றுஎன்பதேகிடையாது. அவ்வுயரத்திலுள்ளகாற்றுச் சமுத்திரமட்டத்தில் உள்ளகாற்றில் நூற்றில்ஒருபங்கு அடர்த்திகூடக்கிடையாது. பறவைகள்பறக்கக்கூடிய மிக்கஉயரம் நான்கு

மைல். அவ்வுயரத்திற்குப்பறந்துசெல்லும் வன்மையுடையது தென் அமரிக்காவிலுள்ள 'காண்டார்' (Condor) என்றுசொல்லப்படும் ஒருவிதப்பெருங்கழுகேயாகும். ஆனல் நான்குமைலுக்குக்குறைந்த உயரத்திலேயே புகைக்கூண்டு ஆகாயவிமானம் முதலியவைகளில் கொண்டுபோகப்படும் சிறு பட்சிகளும், பிராணிகளும் காற்றுக்குறைவினல் மயங்கி விழுந்துவிடுகின்றன. மனிதரில் ஒருவரும் நான்குமைல் உயரத்திற்குமேல் எந்தமலையிலும் இதுவரையும் ஏறவில்லை. சிலர் ஆகாயவிமானங்களில்ஏறி நான்குமைல் உயரத்திற்குப் பறந்திருக்கிருர்கள். சிலர் புகைக்கூண்டிலேறி ஏழுமைல் உயரத்திற்குப் போயிருக்கிருர்கள். ஆனல் அவ்விடங்களில் அவர்கள் மூச்சுவிட இயலாமல் அதிகசிரமப்பட்டிருக்கிருர்கள். ஆராய்ச்சிக்காக உயரம் சீதோஷ்ணநிலை முதலியவைகளைப் பதிவுசெய்யக்கூடிய ஆயுதங்களை மாத்திரம்வைத்து மேலே அனுப்பப்பட்ட சில ஆராய்ச்சிப் புகைக்கூண்டுகள் இருபத்திரண்டுமைல் உயரம் ஆகாயத்திற்கிளம்பியிருக்கின்றன.

பூமியின் மேற்பரப்பில் நூற்றுக்கணக்கான அடிகளுக்குள்ளும் சமுத்திரங்களிலும், பூமியைச்சூழ்ந்து கொண்டிருக்கும் ஆகாயமண்டலத்தின் அடிப்பாகங்களில் நான்குமைல் உயரத்திற்குள்ளும்தான் சீவராசிகள் உண்டு. பூமியிலும், பூமியின் மேற்பரப்பிலுள்ள வாயுமண்டலத்திலும், சமுத்திரத்திலும் தவிரவேறெங்கும் சீவராசிகளேகிடையாது. நமக்குத்தெரிந்தவரையில் ஆகாயமாகிய அகண்ட வெளியில் வேறெங்கும் உயிர்வாழ்க்கையேகிடையாது. நமது உலகத்தைப்போன்ற சுக்கிரன், செவ்வாய், முதலிய கிரகங்களில் சீவராசிகளேனும் அல்லது சீவராசிகளைப்போன்ற வேறுபொருள்களேனும் இருக்கலாம் என்று சாஸ்திர நிபுணர்கள் சொல்லுகிருர்கள்.

வான நூலோரும், நில நூலோரும், இயற்பொருள் நூலோரும் (Physicists) நமது பூமியின் உற்பத்தியைப்பற்றியும், அதன் பூர்வீகத்தைப்பற்றியும் சிலவிஷயங்களைக்கண்டு பிடித்திருக்கிருர்கள், அநேககோடிவருடங்கட்குமுன்னே, சூரியனுனது அக்கினிப்பிழம்பாகச் சுழன்றுகொண்டிருந்ததென்றும், அப்பொழுது அது வெளிச்சத்தையும், வெப்பத்தையும் கொடுக்கும் தற்காலத்திலிருக்கும் உருண்டைவடிவமாக இருக்கவில்லையென்றும், இப்பொழுதிருப்பதைவிட மிகப்பெரிதாகவிருந்ததென்றும், மிகவும் வேகமாகச்சுற்றிக்கொண்டிருந்ததென்றும், அப்படி வேகமாகச் சுற்றிக்கொண்டிருக்கும்பொழுது அநேகதுண்டுகள் அதினின்றும் தெறித்துப் போயினவென்றும், அப்படித் தெறித்துவந்ததுண்டுகளே கிரகங்களாயின

வென்றும், அவர்கள் எண்ணுகிறார்கள். நமது உலகமும் இக்கிரகங்களில் ஒன்றே. அப்படி அழற் பிழம்புகளாகத் தெறித்துவந்தபாகங்களில் உலகமாக மாறியபாகம் சுழலும்பொழுது பிளவுபட்டு இரண்டுதுண்டுகளாகச் சுற்றவாரம்பித்தது. அவ்விருதுண்டுகளிற் பெரியதுண்டுதான் நமது உலகம். மற்றத்துண்டு இப்பொழுது பூமியைச்சுற்றிவருஞ் சந்திரன், ஆதியிலே நமது உலகம் கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த அழற்பிழம்பாகவிருந்தது. அக்காலத்தில் சூரியன், பூமி, சந்திரன், இன்னும் இவற்றைச்சேர்ந்த மற்றக்கிரகங்களும், இப்பொழுது அவை சுழலும் கதியைவிட அதிவேகமாகச் சுழன்றுகொண்டிருந்தன. இதற்குப் போதுமான சான்றுகளும், காரணங்களும் வான நூலோர்கூறுகிறார்கள். அவர்கள் அனேகஅரியவிஷயங்களை உற்றுநோக்கி, அக்குறிகளைத்துணையாகக்கொண்டு அனேக அழகிய உண்மைகளை யூகித்தறிந்து இதனைத்தீர்மானித்திருக்கின்றார்கள். அக்காரணங்கள் அபரிமிதமாயும், அதிவிரிவாயுமிருப்பதால் இங்கு நாம் எழுதாதுவிடுகிறோம். ஆனால் அச்சான்றுகளும், காரணங்களும், கொடிய கனலையும் வெள்ளொளியையுமுடைய இச் சூரியனின்வெப்பம், இப்பொழுது, முன்னிருந்ததைவிடத் தணிந்திருக்கிறதென்பதையும் அது சுழலும்வேகம் முன்னிருந்ததைவிடக் குறைந்திருக்கிறதென்பதையும், அதன் வேகமும் வெப்பமும் இன்னும் குறைந்துகொண்டேவருகின்றன வென்பதையும் நாம்நம்புவதற்கு இடமாகவுள்ளன. அதேகாரணங்கள், நமது பூமிசுழலும்வேகம் குறைந்திருக்கிறதென்பதையும், இப்பொழுதும் குறைந்துகொண்டேவருகின்றதென்பதையும் அதாவது ஒருநாளுக்கு உரியநேரம்நீடித்துக்கொண்டுவருகின்றதென்பதையும், பூமியின் உதரத்திலிருக்கும் உஷ்ணமும் குறைந்துகொண்டேவருகிறதென்பதையும் தெரிவிக்கின்றன. ஒருநாளானது இப்பொழுதிருக்கும் நாளில்பாதிநேரமாகவும் மூன்றிலொருபாகமாகவும் இருந்தகாலங்களும் உண்டு. அப்பொழுது சூரியன் இப்பொழுதிருப்பதைவிட அதிகவெப்பமுள்ளதாயும், மிகப்பெரிதாயும், உதயத்திலிருந்து அஸ்தமிக்கும்வரையில் அதன் அசைவு கண்ணுக்குத்தெரியும்படியாகவும், ஆகாயத்தில்நிலவிக்கொண்டிருந்தது. ஆனால் அக்காலத்தில் உலகத்தில் ஒருபிராணியும் இருந்திருக்கமுடியாதாதலால் அதனைஒருவரும் பார்த்திருக்கமுடியாது. பூமியின்வேகம் குறைந்துகொண்டேவருவதனால் நாட்கள் நேரத்தில் நீடித்துக்கொண்டேவந்து கடைசியில் ஒருகாலத்தில் ஒருநாளானது இப்பொழுது நாம் ஒருவருடமென்றுசொல்லும் காலஅளவுடையதாகும்காலமும் உண்டு; அதாவது பகல்ஆறுமாதத்தையும் இரவு ஆறுமாதத்தையும் கொண்டதாயிருக்கும். அக்காலத்தில் இப்பொழுது குளிர்ந்து கொண்டே

வரும் இச்சூரியனானது, கிரணங்களையிழந்து தன்னொளிகுன்றி ஆகாயத்தில் அசைவற்றுநிற்கும்.

மிகவும் உஷ்ணமானசூரியனும், காலஅளவுகுறைந்து மிகவிரைவாய்ச்செல்லும் பகலுமிரவுமுள்ளநாட்களும், பெரியவெள்ளப்பெருக்குகளும், அதிகவெப்பமும், பெரியபுயல்களும் பூகம்பங்களும் உள்ளகாலத்திலேதான் உலகத்திலே உயிர்வாழ்க்கை முதல் முதல் தோன்றியிருக்கவேண்டும். அப்பொழுது சந்திரன் பூமிக்குச்சமீபமாகவும், அதிகபிரகாசமாயும், மாறிக்கொண்டேவரும் தோற்றமுடையதாயுமிருந்தது.

---

# விருத்தை.

திருக்கோணமலை திரு. மா. பீதாம்பரம்பிள்ளை
எழுதியது.

“சோழவளநாடு சோறுடைத்து” என்று செந்தமிழ்ச்செல்வி ஔவைப்பிராட்டியார் அருளியமொழிக்கு இலக்கியமாய்விளங்குவது பல்வளஞ்செறிந்தசோணாடென்ப. அந்நாட்டின்கண் நோயற்றவாழ்வளிக்கும் அனாமயம் என்னுமோர் அழகியதபோவனமிருந்தது. அவ்வனத்துப்பல்லாயிரம்ஆண்டுகளின்முன், உசத்தியமுனிவர் என்பார் ஒருவர்இருந்தார்; அன்னார்பன்னியர் மாதரார் தொழுதேத்தும் மாண்புவாய்ந்த மங்கலையார் ஆவர். இருமுதுகுரவரும் அருந்தவம்புரிந்து ஒரு பெண்மகவைப்பெற்று அம்மகவுக்கு விருத்தை என்னும் பெயர்புனைந்தனர்.

தாய்தந்தையர் மகிழ்வுறுமாறு, விருத்தை என்பாள், பல்கலையும்பயின்று கல்வியிலும் ஒழுக்கத்திலும் நிறைந்துவிளங்கினள். மங்கைப்பருவம் எய்தும் காலமணுகிற்று; பதினோராண்டும் பத்துத்திங்களும்வந்தெய்திய பருவத்தினையுடைய அவள், மங்கலையாகிய நற்றாய்விடைகொடுப்பப் புனல்விளையாடற்பொருட்டு ஆயமகளிர்புடைசூழச்சென்று அழகியதோர்பூம்பொழில்புகுந்தாள். கம்பர்கவியெனத்தெளிந்த கான்யாற்றினது நீரில்மூழ்கி மகிழ்சிறந்து அணங்கனாரோடு மருங்குளசோலையிற்போய் மலர்கொய்து அன்னவை அணிந்து விளையாடிக்கொண்டிருந்தாள்.

வாசமலர்க்கொடியின் ஊசலாடியும், மயிலொடு மாறாடியும், குயிலொடு மாறுகூவியும் பலவாறு இன்புற்றிருந்தவள். கண்ணும் மனமுங் கவ

ரும் ஒண்ணுதன்மகளிர்தற்சூழ்தரத் தாரகைநடுவண் தண்மதிபோலத் தாய கஞ்செல்லுமாறு திரும்பிப்போந்தனள்.

அப்பொழுது கருமுகில்போன்ற பெரியதோர்யானைவந்தணுகிற்று; அதுதான்: கனன்று காய்கனல் சொரிதரும் விழியது; பயங்கரமானவடிவ வத்தினையுடையது; தூங்குகின்ற துதிக்கையையுடையது; உரல்போன்ற கால்களையுடையது; முறம்போன்ற விரிந்தசெவியினையுடையது; கண்டாரைக்கொல்லும் கடுஞ்சினத்தது. அந்தயானையைக்காண்டலும், அவ்வழிச் சென்ற ஆண்மக்களும் நஞ்சினைக்கண்டு தேவர் ஓடியவாறு வெருவியோடினர். கன்னிகையாகிய விருத்தையென்பவள் அதனைக்கண்டு துன்புற்று அன்னமென்னடைமெல்லியர் தன்னைப்பிரிந்து சிதறியோடுதலும், இனி இழைப்பது யாதெனவருந்தி எக்கழுற்றுத் தன் செம்மலர்ச்சீறடிமேற் சிலம்புகிடந்து சிலம்புபுடைப்ப, நினைத்தற்கரியவேகத்துடன் ஓடத்தொடங்கினள் அவள் ஓடும்வழியில் பசும்புற்செறிந்திருந்தது. புன்மறைவில், கீழ்மைப்பட்டு ஏழையரானசுற்றத்தார் மறைந்துவருவதுபோல் ஒருகிணறு இருந்தது. வெருவியோடிய விருத்தையானவள் அக்கூவலின்கண் வீழ்ந்திறந்தனள். நங்கையைத்துரத்திய நால்வாயானது பிளிறுபேரொலியுடன் சேரமானுட்டைச்சார நடந்தது.

அஞ்சியோடிய தோழிப்பெண்கள் எவ்விடங்களினுமாகிச் சிதறியவர்களாய்ப் பின் ஒருங்குகூடினர். அவர்களுடையமேனி வியர்த்தது; கூந்தல்சரிந்தது; நெஞ்சுதளர்ந்தது; இவ்வாறு துன்பக்கடலுள்ஆழ்ந்த ஆயமகளிர் விருத்தையைத்தேடினுர்கள். யானையைக்கண்டிலர்; கன்னிகைதனையுங்காண்கிலர்; அதனுல் மனங்கவன்று, உயிர் உண்டோ இல்லையோ என்று கண்டோர் ஐயுறுமாறு மயங்கிவீழ்ந்தனர். பின் ஒருவாறுமயக்கந்தெளிந்து வளர்ந்தெரிகிற அக்கினி புண்ணிற்பட்டாற்போலப் புலம்புவாராயினர்.

பெண்ணுக் கணிகலமே! பேரழகுக் கோருருவே
கண்ணுக் கணியே! கமலத்துச் செந்திருவே!
மண்ணிற் புனல்படிந்தாய் வானதியு மாடுவதற்
கெண்ணித் துணிந்தோ வெமைவிட்டுப் போயினையே.

வன்னப் புனலாட்டி வல்லே புறங்காத்தென்
மின்னைத் தருதி யெனவே விடைகொடுத்த
அன்னைக்கென் சொல்வேம் அடுகளிற்றின் முன்னாக
உன்னைத் தனிவிட் டுயிர்கொண்டு போந்தனமே.

ஐயர் உசத்தியரும் அன்னையெனு மங்கலையும்
வையம் பரவுகின்ற மாதுலராங் குச்சகருங்
கையறவின் மூழ்கக் கரந்தாய் இனியொருகாற்
செய்ய முகமுந் திருநகையுங் காட்டாயோ.

பாவைநல்லார் இவ்வாறுபுலம்பி இரங்குற்று உன்னற்கருஞ்சிறப்பு வாய்ந்த உசத்தியமுனிவர் நற்றவத்தின்மன்னுற்ற தெய்வத்தன்மைபொருந்திய அனுமயம் என்னும் வனத்தில்வந்து, அம்முனிவரது இல்வாழ்விற்கியைந்த மனைவியாகிய மங்கலைக்கு நிகழ்ந்தனவற்றைக்கூறி அவலித்தார். அன்னையாகிய மங்கலை தோழியர்கூறியமொழியைக் கேட்டலும் வயிற்றிலடித்து, தீயிலிட்ட மெழுகுபோலக்கரைந்து மனம்மறுகி கண்ணினின்றும் நீர் ஆருய்ப்பெருக வாய்குழறித் தன்கணவனது இரண்டுபாதங்களிலும் வீழ்ந்து நிகழ்ந்தசெயலைச்சாற்றினள். ஒருவழிப்படுத்திய அறிவையுடைய உசத்தியமுனிவர் அவ்வார்த்தைகளைக்கேட்டுக் கன்றைப்பிரிந்த தாய்ப்பசுப்போலக்கவலைப்பட்டுப்புலம்பித் தம்மகளோடுபோய்ப் பிரிந்துவந்த தோழியரைநோக்கி, ''சினக்களிறு எங்கள்மகளைக்கொன்றதுவோ? நீவிர் அஞ்சாது கூறுமின்'' எனச்செப்பினர். செப்பலும், தூயபுனலாடித் துறைபுகுந்து சூழ்பொதும்பில் ஆயத்தாருடன்போய் விளையாடி, அவ்விடத்தைநீங்கி இங்கேவரும்போது, காயும்அழல் வெங்கட்களிறுவந்ததுகண்டு, அறிவுதளர்ந்து எல்லோமும் ஓடினம். ஓடி அலைந்தேம்; ஒருவர்போனவழியில் வேறொருவர்கூடிப்போதலின்றிப் பிரிந்துசென்றேம். யாங்கள் அணிந்திருந்த ஆபரணங்கள்எல்லாம் ஒடிந்து சிதறுண்டன; இவ்வாறு வெருவியோடிய யாம் கொல்யானையிற்றப்பிப் பின்பு விருத்தையைத்தேடினேம்; தேடியும் அவ்விடத்துக்கண்டிலமாதலால் ஈண்டு வந்தேம்'' என்று அழுதகண்ணும் சிந்தியமூக்குமாக விடைமொழிந்தனர் ஆயமகளிர்.

ஒண்ணுதன்மகளிர் உரைத்தமாற்றஞ்செவிமடுத்த உசத்தியமுனிவர் கதமெனவெழுந்து களிற்றின்வரவுநிகழ்ந்த இடத்தினையணுகித் தியங்குற்றுநின்றார்; கவலைமேலீட்டினால் அங்கும்இங்கும் பார்த்தார்; மகளைக்கண்டிலர்; உளமுடைந்தார்; பின்பு சிறிதுதெளிந்து கண்விழித்தார்; தம்மகளுடைய சிறங்கிளரும் பொன்னாபரணங்கள் ஒடிந்து சிதறுண்டு ஒருவழியிற்கிடப்பக்கண்டு ''என்அம்மைபடர்ந்தநெறியிதுவோ!''வென்று வருத்தமுற்றார். ஆபரணங்கள் சிதறியவழியையேதொடர்ந்து மகளைக்காண்போமென்று நினைத்துத்தோழியர்களுடன் போயினர். ஒரு பாழ்ங்கிணறு மறைந்துகிடக்கக்கண்டார்; அக்கிணற்றுள் விண்ணுலகம்புகுந்த தன்மகளைக்கண்டு மனங்கலங்கினர்.

தம்மகள் கிணற்றுள் இறந்துகிடப்பதைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக் கண்களினின்றும் நீர்பாய அக்கூவலின்கட்குதித்தார். மகளைத்தூக்கிக் கரையின்பாற்படுத்திப் பார்த்துப்பார்த்துப் புலம்புவாராயினர்; தோழிப்பெண்கள் அப்பிரேதத்தைத் தழுவிக்கொண்டு புலம்பினர். அவ்வழுகையொலியைக்கேட்டுப் பெற்றதாயாகிய மங்களை சோலையிற்புகுந்த குயில்ஒலிப்பதுபோல மிகவும்புலம்பிப் பெருந்துயரக்கடலுட்பட்டாள்.

தன்பால்வந்துபிறந்தமகளை இழந்தமையால், ஆற்றாதவளாய் அவள் மேற்கொண்ட அன்பின்மிகுதியினால் உயிரானதுபதைக்க வயிற்றிலடித்துக் கவலைப்பட்டுக்கதறி ஏங்கி, மின்னலின்மேல் வேறொருமின்னல் பொருந்தியதன்மைபோல அவளதுநெஞ்சின்மேல் வீழ்ந்து "ஓ மகளே! தென்பாலிற்புகுந்தனையோ!" எனப்புலம்பித் தேம்பலுற்றாள்.

அன்னேயோ! அன்னேயோ! ஆகொடிய
தறனேயோ வறியே னந்தோ!
முன்னேயோ நெடுங்காலம் குழவியின்றிப்
பெருநோன்பு முயன்று பெற்ற
மின்னேயோ வுயிரிழந்து வெள்ளிடையிற்
கிடந்திடுமால் விதியார் செய்கை
இன்னேயோ! யானொருத்தி பெண்பிறந்து
பெற்றபயன் இதுவே யன்றோ.

புலிக்கணங்கள் திரிகானில் ஒருமானை
வளர்த்ததனைப் போக்கி நின்றே
அலக்கணுறு வோரெனவே கைவிட்டுத்
தமியேனு மழுங்கா நின்றேன்
மலர்க்கமலத் திருவைநிகர் என்மகளைக்
கொல்லியமுன் வந்த தந்தக்
கொலைக்களிற்றின் வடிவன்றே கொடியேன்செய்
பெரும்பவத்தின் கோல மன்றோ.

அறங்காட்டிற் சென்றதுவோ! தெய்வதமு
மிங்கிலையோ! வரிதா முத்தித்
திறங்காட்டுந் தவநெறியும் பொய்த்தனவோ
கலியுமினிச் சேர்ந்த தேயோ!

மறங்காட்டும் வனக்களிறு வந்தடர்க்க
வீண்டெனது மாது மாண்டு
புறங்காட்டிற் கிடந்திடுமோ வென்னேயென்
னேயிதுவோர் புதுமை யாமே!

என்று இன்னோரன்ன பலவற்றையெல்லாங்கூறி இடருற்றுப் புலம்பும்பொழுது, மணம்நிறைந்த கூந்தலையுடையபெண்கள் சூழ்ந்து வருந்தித் தியங்கினர். நெருங்கிய சுற்றத்தவர்களும் பிறரும் ஆகியஎல்லோரும் மனமுருகி நைந்தார்கள்.

இங்ஙனம் மகளிர்பலரும் சுற்றமும் தாய்தந்தையரும் உளமுடைந்து கவல்கின்ற அப்பொழுது தவவலிமையில்மேம்பட்ட "கோட்டமில்சிந்தையோனுங்குச்சகன்" என்னும்முனிவர்தோன்றித் தம் அருட்கண்ணால் விருத்தையை நோக்கினர். உடனே அவள் துயின்றவள்போல் விழித்தெழுந்தனள். எல்லோரும் இன்பக்கடலுள் ஆழ்ந்தனர்.

---

உ

திருக்கோணமலை மாதர் ஐக்கியசங்கம்

# முதலாம் ஆண்டுநிறைவு விழா.

திரு. தி. க. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் B. A.

சொல்லியது.

சீர்வாய்ந்து செல்வர்திகழ் சிறப்பின்மிகு திருக்கோண
மலையாம் வெற்பிற்
கார்வாய்ந்து மழைமிகுந்து கவினார்ந்த வாண்டுநல
கால யுத்திப்
பார்வாய்ந்த பங்குனியிற் பயிர்ப்பொடுநாண் மடமச்சம்
பயின்று மாதர்
நார்வாய்ந்து நலந்திகழ மாதரயிக் கியசங்கம்
நாட்டி னாரே.

அன்னநல சங்கத்தே யக்ராச னம்வகித்தா
ளழகின் உருவா
மன்னுபுகழ்க் கனகரத்ன மாதுசிரோ மணியார்வர்ள்
மருவி நின்று
துன்னுபல காரியமும் துகளறநின் றியற்றுவாள்
தூமம் மல்கு
பின்னுகுழல் தையல்நா யகியென்னப் பேசுமெழிற்
பிணை யன்னாளே.

சங்கத்தின் உபத்தலைமை தங்கம்மாள் தனிவகிக்கத்
தணியா வாய்மைத்
தங்கத்தி னணியம்மாள் தனாதிகா ரத்துவத்தைத்
தாங்கி நிற்க
அங்கத்தின் நீலாய தாட்சி அழ கிராசாவோ
டழகம் மாளும்
பங்கொத்து மனோன்மணியும் பாக்கியமும் பஞ்சாயத்
தாராய் மேவ,

கல்விதமிழ் மொழிமாதர் கடமைமனை யறமொழுக்கம்
கற்பு மாட்சி
நல்லொழுக்கம் நங்கைமா ரொழுக்கமொடு சத்தியமும்
நாட்டு மன்பும்
ஒல்லைமுறை ஒற்றுமையோடுயர்செல்வப்பொருள்தருமம்
உவந்து தந்தை
நல்லதாய்ப் பேணல்பிள்ளை வளர்த்தலெனும் விஷயமிவை
நயந்து பன்னி,

ஓராண்டு கழிந்தெனநல் லாண்டுநிறை விழவயர்வான்
ஒருங்கு கூடிக்
காரார்ண்ட கருங்குழலார் கருத்தொருமித் துளமகிழ்ந்து
காதல் கூர்ந்து
சீரார்ண்ட செல்வக்கிரு கத்தினிருந் தெல்லோரும்
சிறப்பு வாய்க்க
ஊராண்ட பெருமையுற உயர்நிலைமை ஓங்குவகை
உற்ரு ரன்றே.

வாழ்க மன்னவன் வாழ்க மறநெறி
வாழ்க மாநிலம் வாழ்க மனையறம்
வாழ்க கோண மலைவளர் மாதரார்
வாழ்க கோண மலைமாதர் சங்கமே.

திருக்கோணமலை மாத ரைக்கிய சங்கம்

# இரண்டாம் ஆண்டுநிறைவு விழா.

## திரு. தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் B. A.

சொல்லியவை.

கோதை மங்கையர் கூடிக் குழாங்கொண்டு
காதன் மிக்குக் கருத்தொரு மித்துயர்
மாதர் சங்கம் அமைத்து மனத்துள
பேத கற்றிப் பிறங்க விழைந்தரோ,

நாளுந் திங்களு நல்லன ஆய்ந்துகொண்
டாளுந் தன்மை அணங்கன மாதரார்
வாளும் வேலும் மலங்க விழித்தனர்
தாளின் மிக்கனர் தற்செய முந்தினர்;

மாதந் தோறும் மகிழ்ந்து குழுமினர்
தீதங் கோட்டித் தெளிந்துரை யாடினர்
வாதஞ் செய்தனர் வாக்கு நிரம்பினர்
போதம் எய்தினர் புன்மை அகற்றினர்;

சீலம் மிக்குத் திருவிற் சிறந்தனர்
சாலும் சாலும் எனத்தக வெய்தினர்
கால முற்றுக்கண் மாறு தடன்வர
ஞாலம் முற்றவும் நற்புகழ் வித்தினர்.

இந்த மங்கையர் சங்கம் எழிலுற
வந்து பூவின் மலிபுகழ் எய்துக
நந்த லின்றி எந்நாளுந் நலனுறீ இப்
பந்தம் நீங்கிப் பணைத்து வளர்கவே.

உ

## திருக்கோணமலை மாதர் ஐக்கியசங்கம்.

# மூன்றாம் ஆண்டுநிறைவு விழா.

### திரு. தி. க. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் B. A.

சோல்லியவை.

திருந்துவளத்துத் திருக்கோணைத்தேனார்சோலைத்தென்கயிலை
புரிந்துவாழும்பொன்மடவார்போகம்பொருளுமுடன்பூப்பப்
பொருந்தித்தம்முட்புலன்வளர்ப்பான்புரிந்தவரும்பேரிருஞ்செயலைப்
பரிந்துகேண்மின்பாரிடத்தீர்பகர்வேம்யாமும்பழுதறவே.

மண்ணிற்பிறந்தமாதர்கட்குமருவத்தக்கவனப்பாவ
தெண்ணிற்சிறந்தவுடல்வனப்புமியன்றநடையின்வனப்புமல
கண்ணிற்சிறந்தகல்வியினாற்கவினார்வனப்பேயெனக்கருதிப்
பண்ணிற்சிறந்தமொழிமடவார்பரிந்தொர்சங்கந்தாபித்து,

திங்கடோறுந்திரண்டுகுழீ இச்செல்வக்கிருகத்தெல்லோரும்
தங்கடங்களுணர்வினுக்குத்தகநற்பொருள்களாராய்ந்து
சங்கையின்றியெடுத்துரைத்துத்தமர்தமுளத்துமாலகற்றி
எங்கேயெழிலிஞ்ஞாயிறிவர்க்கென்னுமாறுசிறப்பெய்தி,

மூன்றுவருடமாகநனிமுயன்றுமாதர்க்கணிகலமாய்
ஏன்றவிசைநல்யாழ்ப்பாணோடியல்கட்டுரையின்வகைகோவை
சான்றமடைநூன்முடிவினொடுதகுவட்டிகையின்செயல்கோலம்
ஆன்றகலைகளவாவுடனேயாரும்வியப்பவவைபயின்று,

யாண்டுநிறைவுக்கொண்டாட்டயாணர்விழவுகடியயர்வான்
ஈண்டிநிறைந்தாரெய்தினாரீர்ந்தண்கோதையிளநல்லார்
மாண்டகுணத்தார்மாக்கடல்சூழ்மாசில்கோணமலைநகரார்
பூண்டகலத்தார்பொற்பமைந்தார்புகன்றுதாமும்புக்காரே.

மனத்தின்மாசுகழிந்தொழியமணிப்பொற்கோணைமாதரார்
புனத்திற்பயிலுமயிலன்னார்பொழிலிற்பயிலுங்குயிலன்னார்
இனத்திற்கூடியியற்றுகின்றவெழில்கூரைக்கியநற்சங்கம்
கனத்துத்திகழ்ந்துகவின்சிறந்துகலந்துபொலிந்துவாழியவே.

உ

கோணேசர் துணை.

திருக்கோணமலை

# மாதர் ஐக்கிய சங்கத்தின்

# ஐந்தாம் ஆண்டு அறிக்கைப்பத்திரம்.

## கடவுள்வாழ்த்து.

### கோணேசர்.

சீர்கொண்ட கருமுகிலுஞ் சதுர்வேதச்
செம்முகிலுஞ் சிறந்து பேண
நீர்கொண்ட செஞ்சடையில் நிமிரரவுங்
கூனிலவு நிரந்து சூழத்
தார்கொண்ட திருமார்பில் வெண்ணூலும்
பசுந்தொடையுந் தயங்கத் தோற்று
மேர்கொண்ட கயிலைமலையொரு முதல்வ
னிருசரண மிறைஞ்சி வாழ்வாம்.

### மாதுமையம்மை.

பூவினுறை தருமணம்போற் பலயோனி
பேதவுயிர்ப் பொம்ம ரோறு
மேவியிருந் தருண்முறையால் வேண்டினர்க்கு
வீட்டின்பம் விளங்கக் காட்டி
மூவகைய தொழினடத்துங் கோணமலை
தனில்வாழு முன்னோன் பங்கிற்
றூவியசீர்ப் பிடியன்ன மென்னடையம்
பிகைபாதந் தலைமேற் கொள்வாம்.

சரசுவதி.

பூங்கமல மலர்ப்பொகுட்டி னரசிருக்கு
மறைவாய்ந்த புனித னுவிற்
றேங்கருளா லினிதுறையுஞ் செல்விதனைப்
பலகலைநூ றெரிக்க வல்ல
கோங்கினிள முலையாளை மணிவடம்புத்
தகங்கழுநீர் குலவு செங்கை
தாங்கியெழிற் புலமைபெறு வாணிபூங்
கழலிணைக டலைமேற் கொள்வாம்.

---

## அன்பின்மிக்க சகோதர சகோதரிகாள்!

திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்கத்தினராகிய யாம், ஈண்டுவந்து குழுமியிருக்கும் அன்பர் அனைவர்க்கும் வணக்கம் செய்கின்றோம். எங்கள் சங்கத்தின் ஐந்தாம்ஆண்டு அறிக்கைப் பத்திரத்தைத் தங்கள்முன்னிலையிற் படிப்பது எமக்கு உவகை யைவிளைக்கின்றது. நீவிரும் அன்புடன்கேட்டு அகமகிழ்வெய்தி எங்கள் சங்கத்தை வாழ்த்துமாறு வேண்டுகின்றோம்.

இச்சங்கத்தின் நான்காம்ஆண்டு நிறைவுவிழா சென்ற குரோதனவருடம் மார்கழிமாசம் இருபத்தாருந் தேதியிலன்று ஸ்ரீமத். விபுலாநந்தசுவாமிகளின்தலைமையிற் சிறப்பாக நடத்தப் பட்டது. இவ்வாண்டு இருபத்துமூன்று (உங) கூட்டங்கள் நடத் தப்பட்டன. இவற்றுள், பதினான்கு (கச) கூட்டங்களில் அங்க த்தினராயுள்ள பெண்மணிகளாற் பிரசங்கங்கள்செய்யப்பட்டன. அவ்வப்போது பிரசங்கஞ்செய்தவர்கள் கு. தெய்வநாயகியம்மா ள், தா. பொன்னம்மாள், அ. செல்வநாயகியம்மாள், நா. நீலாய தாக்ஷியம்மாள், க. யோகாம்பிகைஅம்மாள், க. வள்ளியம்மாள், செ. வடிவாம்பாள், அ. பாக்கியம்மாள், பொ. செல்லம்மாள், சு. தங்கம்மாள், வே. பரமபாக்கியம்மாள் என்னும் பதினொருவ

ருமாவர். இவர்களாற் பிரசங்கிக்கப்பட்டவிஷயங்கள், கண்ணப்பநாயனர், இயற்பகைநாயனர், நாகரீகம், இசைவாதுவென்றசருக்கம், விருத்தகுமாரபாலரானபடலம், நம்மக்கள் உடம்பு, காரைக்காலம்மையார், பக்திவலையிற்படுவோன் காண்க, ஆதிரையார், விநாயகர்மகத்துவம், அறிவு, சமயம், வல்லாளன்சரித்திரம், வேகவதி என்பன.

எங்கள் சங்கத்தின்முன்னேற்றத்தை விரும்பி உதவிபுரிந்துவரும் பண்டிதை ஸ்ரீமதி. ந. பத்மாசனி அம்மாளால் எழுதியனுப்பப்பட்ட இரண்டுகட்டுரைகளும் கூட்டத்திற்படிக்கப்பட்டன. பிரமஸ்ரீ. சிவ. பஞ்சாக்ஷரக்குருக்கள் அவர்களால், ஆலயவழிபாடு, இளையான்குடிமாறநாயனர் என்னும் விஷயங்கள் உபந்நியசிக்கப்பட்டன.

திருவாளர்களான சு. கைலாசபிள்ளை, டாக்டர் ஜயதிலக, சென்னை எம். சுப்பிரமணியஐயர், மா. பீதாம்பரம்பிள்ளை என்பவர்களால் முறையே, சிறுத்தொண்டர், பாண்டுக்கிருமி, (மாயாதீபக்காட்சியுடன்), ஸ்திரீதர்மம், நாகர்கோன்பாவை விகாரமாதேவி என்னும்விஷயங்கள் பிரசங்கிக்கப்பட்டன.

ஸ்ரீமத். வித்தியாநந்தசுவாமிகளால் "பக்தி" என்னும் விஷயமாகவும், எங்கள்தென்கயிலையில்இருந்து சைவத்திற்கும் தமிழிற்குமாக அருந்தொண்டுபுரிந்துவரும் ஸ்ரீமத். விபுலாநந்தசுவாமிகளால் "ஸ்ரீசாரதாதேவி" என்னும் விஷயமாகவும் சிறந்த பிரசங்கங்கள் செய்யப்பட்டன.

இவ்வாண்டு தொடக்கமாகக் கூட்டங்கள் ஸ்ரீ சண்முகவித்தியாசாலை, தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பெற்றன. சென்ற கார்த்திகைமாசம்முதல் ஆங்கிலபாடசாலை மண்டபமான இம்மண்டபத்தில் நடத்தப்பெற்றுவருகின்றன. கூட்டங்கள்நடத்துவதற்கு இம்மண்டபத்தைத் தந்துதவுகின்றவராகிய ஸ்ரீமதி. ச. தங்கம்மாளுக்கு இச்சங்கத்தாராகியநாம் என்றும் நன்றியறிதலுள்ளோராயிருக்கின்றோம்.

ஸ்ரீ

இவ்வாண்டுதொடக்கமாக "மாதர்மதிமாலிகை" எனப் பெயரிய ஒரு வருடாந்தப்பத்திரிகையை வெளியிடுகின்றோம். அதனைப்பெற்றுச் சங்கத்தினரை ஊக்கப்படுத்துமாறு அன்பர் அனைவரையும் வேண்டுகின்றோம்.

எதிர்வரும் ஆண்டிலும் சங்கம் நன்குநடைபெற்று வளர்ச்சியடையுமாறு ஸ்ரீ கோணநாயகர் திருவருளை வேண்டுகின்றோம்.

வாழிதென் கயிலையம் பொருப்பும் வையமும்
வாழிமெய் யன்பர்தங் கணமும் வண்மையும்
வாழியஞ் செழுத்தினில் வளமும் நீதியும்
வாழிசீர் தொண்டர்சீர் வாழி வாழியே.

—ஸ்ரீ. தக்ஷிணகைலாசபுராணம்.

இங்ஙனம்.

திருக்கோணமலை, மாதர்ஐக்கியசங்கத்துக்

காரியநிர்வாகசபையார்,

தையல்நாயகி சுப்பிரமணியம்,

காரியதரிசி.

8-1-1927.